பக்கங்கள் : பத்து

[...]gistered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 12 ஞாயிற்றுக்கிழமை (29.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 242

# கிழக்கில் 3 மாதத்தில் தேர்தல் நடத்த

# ரூ. 650 கோடி செலவில் எழுச்சித் திட்டம்

## திருமலையில் செவ்வாயன்று அங்குரார்ப்பணம்

கொழும்பு,ஜூலை29

கிழக்கு மாகாணத்தில் இன்னும் மூன்று மாதங்களில் தேர்தல்களை நடத்தும் இலக்குடன், அதற்கு இசைவாக, 'கிழக்கு எழுச்சி' என்ற புனரமைப்பு புனர்வாழ்வுத் திட்டம் ஒன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த உள்ளது.

'கிழக்கு எழுச்சி'த் திட்டத்துக்கு மொத்தம் 650 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பழுதடைந்த மீன்பிடித் துறைமுகங்களில் ஒன்றின் புனரமைப்பு வேலைகளை நாளைமறுதினம் ஆரம்பிப்பதுடன் 'கிழக்கு எழுச்சி' புனரமைப்புத் திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகிறது.

கிழக்கில் போர் மற்றும் ஆழிப்பேரலையால் சேதமடைந்த பாடசாலைகள், அரச கட்டடங்கள், வீடுகள் ஆகியன 650 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட உள்ளன.

ஜனாதிபதியின் பணிப்பின் பேரில், சகல அமைச்சுக்களும் தமது அமைச்சின் கீழ் கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ள வேண்டிய திட்டங்களை இனங்காணும் பணியில் இப்போது மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

தினமும் விசேட கூட்டங்கள் நடத்தப்பட்டு புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் குறித்து ஆராயப்படுகின்றது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பஸில் ராஜபக்ஷவின் முழுப்பொறுப்பில், தேசத்தைக் கட்டி எழுப்பும் அமைச்சர் சுஸந்த புஞ்சி நிலமேயினால் 'கிழக்கு எழுச்சி' திட்ட அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்பட உள்ளன.

கிழக்கு எழுச்சியின் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து அவற்றை மூன்று மாத காலத்தில் பூர்த்தி செய்ய அரசு திட்டமிட்டுள்ளது. அதன் பின்னர் அங்கு தேர்தலை நடத்துவது என்ற இலக்குடனேயே

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஒரு மாத காலத்தில் எரிபொருள் விலைகள் மீண்டும் ஏகிறின!

கொழும்பு,ஜூலை 29

ஒரு மாத இடைவெளிக்குள் மீண்டும் எரிபொருள்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் உயர்த்தப்பட்டுள்ளன.

பெற்றோல் ஆறு ரூபாவாலும், டீசல் நான்கு ரூபாவாலும் மண்எண்ணெய் ஒரு ரூபாவாலும் விலை உயர்த்தப்பட்டுள்ளன.

இதன்படி-

கொழும்பில் பெற்றோலின் விலை 117 ரூபாவாகவும் டீசல் 75 ரூபாவாகவும் மண்எண்ணெய் 68 ரூபாவாகவும் இன்று தொடக்கம் விற்பனை செய்யப்படும்.

கடந்த மாதம் 29ஆம் திகதி பெற்றோலின் விலை 5 ரூபாவாலும், டீசலின் விலை 4 ரூபாவாலும், மண்எண்ணெயின் விலை 16 ரூபாவாலும் விலை உயர்த்தப்பட்டது தெரிந்ததே. (அ-1)

## 2 வாரங்களில் மக்கள் கணக்கெடுப்பை கிழக்கில் நடத்துவதற்கு துரித ஏற்பாடு

கொழும்பு,ஜூலை29

அரசினால் மீட்டெடுக்கப்பட்ட கிழக்கில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பை இன்னும் இரண்டு வாரங்களில் நடத்துவதற்கு துரித நடவடிக்கைகள் முழு அளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பணியில் ஈடுபடுவதற்காக பல்வேறு பதவிகளில் உள்ள ஆளணியினர் திரட்டப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தற்போதும் உரிய பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது.

மக்கள் கண்கெடுப்புடன் அவர்களது உடைமைகள், சேதமடைந்த இருப்பிடங்கள் ஆகியனவும் கணக்கெடுக்கப்பட இருக்கின்றன.

இக்கண்கெடுப்பு நடவடிக்கையை தமிழ்த்தேசிய கூட்டமைப்புக் கண்டித்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## திருமலை அனல் மின்சார நிலையம்; ஆராய இந்திய அமைச்சர் வருகிறார்

கொழும்பு,ஜூலை29

திருகோணமலையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள அனல் மின் நிலையத் திட்டம் தொடர்பாக ஆராய்வதற்காக இந்திய மின்சக்தி அமைச்சர் நிபுணர் குழு ஒன்றுடன் அடுத்த வாரம் இலங்கை வரவிருக்கின்றார்.

மின் வலு மற்றும் மின்சக்தி அமைச்சர் டபிள்யூ.டி.ஜெ.செனவிரத்தின இத்தகவலை வெளியிட்டார்.

இரத்தினபுரியில் கொடகவலவில் மின் விநியோகத் திட்டத்தை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

இந்திய மின்சக்தி அமைச்சர் தலைமையில் நிபுணர் குழு ஒன்று வருகின்றது. திருகோணமலையில் அனல் மின் நிலையம் அமைப்பது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்தை அக்குழு பார்வையிடும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை -

இலங்கையில் அனல் மின்நிலையம் அமைப்பது தொடர்பாக இந்திய நஷனல் தேமல் பவர் கோர்ப்பரேஷனுடன் இலங்கை அரசும் மின்சார சபையும் ஒப்பந்தம் ஒன்றில்

(10ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் உண்ணாவிரதமிருக்கும் பலரின் உடல் நிலை ஆபத்தான நிலையில்!

லண்டன்,ஜூலை29

பிரிட்டனில் 4 தடுப்பு முகாம்களில் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வருபவர்களில் சிலரின் உடல் நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அகதி அந்தஸ்து கோரி சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டு, இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு ஆயத்தமாக 61 பேர் நான்கு தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

தம்மை இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டாம் எனக் கோரி அவர்கள் கடந்த 24ஆம் திகதி தொடக்கம் உண்ணாவிரதம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மங்களவுடன் கூட்டு வைத்தமைக்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குள் எதிர்ப்பு!

கொழும்பு,ஜூலை 29

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மக்கள் பிரிவுடன் - மங்கள சமரவீரவுடன் - கூட்டு வைத்து ஒப்பந்தம் ஒன்றில் ரணில் விக்கிரமசிங்க கைச்சாத்திட்டது குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு சாரார் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதாகத் சொல்லப்படுகிறது.

ஐ.தே.கட்சியின் செயற்குழுவுடன் ஆலோசனை நடத்தாமல் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு தலைவர் மங்கள சமரவீரவுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டதற்கு கட்சியின் ஒருசாரார் எதிர்த்துள்ளதாக அறியப்படுகிறது.

எதிர்வரும் 5ஆம் திகதி கட்சியின் செயற்குழு கூடும்போது இந்த விவகாரம் எழுப்பப்படும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

செயற்குழுவுடன் எந்தவித ஆலோசனையும் கலக்காமல் மங்கள சமரவீரவுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டது தவறானது என்று கட்சியின் மூத்த பிமுகர்கள் பலர் தெரிவித்திருந்தனர்.

செயற்குழுக் கூட்டத்தில் இவ்விவகாரத்துக்குச் சரியான தீர்வு காணப்படாவிட்டால், ஐ.தே.க. பிளவுபடும் நிலை தோன்றக்கூடும் என்று கட்சியுடன் நெருங்கிய வட்டாரங்கள் கருத்து தெரிவித்தன. (அ-1)

## மக்கள் பிரச்சினைகளைத் தீர்க்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

### நாளை தொடக்கம் அவர்களைச் சந்திப்பார்

யாழ்ப்பாணம்,ஜூலை29

குடாநாட்டில் மக்கள் ஏதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்காக சமுக சேவைகள் மற்றும் சமுகநலத்துறை அமைச்சரும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா மக்களை நேரில் சந்தித்துக் குறைகளைக் கே[...]றிவார். அவர் நேற்று யாழ்ப்பாணம் வ[...]ந்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். நகரில் தங்கி இருக்கும் டக்ளஸ் தேவானந்தா நாளை திங்கட்கிழமை தொடக்கம்

(10ஆம் பக்கம் பார்க்க)

## குடுமிமலைக்கு கோத்தபாய

கொழும்பு,ஜூலை29

படையினரால் மீட்கப்பட்ட குடுமிமலைப் பிரதேசத்துக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ நேற்று விஜயம் மேற்கொண்டார்.

முப்படைகளின் பிரதம தளபதி டொனால் பெரேரா, இராணுவத் தளபதி சரத் பென்சேகா மற்றும் மூத்த படை அதிகாரிகள் சகிதம் கோத்தபாய குடுமிமலைக்கு சென்றார்.

படை நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளிடம் இருந்து மீட்கப்பட்ட ஆயுத தளபாடங்களையும் அவர் பார்வையிட்டார்.

அந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள், மக்கள் மீள்குடியமர்வு ஆகியன தொடர்பாகவும் அவர் கள அதிகாரிகளுடன் ஆராய்ந்தார். (அ-1)

## குடாநாட்டில் ஒரு வாரத்தில் 4 படுகொலைகள், 2 கடத்தல்கள்

### கண்காணிப்புக் குழு அறிக்கை

கொழும்பு,ஜூலை29

யாழ்ப்பாணத்தில் இயல்பற்ற நிலைமை உள்ளது. இம்மாதம் 16ஆம்திகதி தொடக்கம் 22ஆம் திகதி வரையான ஒரு வாரத்தில் 4படுகொலைகளும், 2 கடத்தல்களும் ஒரு பண அறவிடுதல் சம்பவமும் இடம்பெற்றுள்ளன என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

ஜூலை 16-22 வரையிலான காலப்பகுதியில் வடக்கு - கிழக்கு பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பான அறிக்கையை கண்காணிப்புக்குழு வெளியிட்டிருக்கிறது.

சகல பகுதிகளிலும் இடம்பெற்ற சம்பவங்களையும் அந்த அறிக்கையில் கண்காணிப்புக் (10ஆம் பக்கம் பார்க்க)

## தம்மைத் தாக்கிய 2 படகுகளை அழித்ததாக கடற்படை அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

மன்னார் - விடத்தல்தீவு கடற்பரப்பில் நேற்று மாலை 4.30 மணியளவில் கடற்புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடை யில் மோதல் இடம்பெற்றுள்ளதாக கடற்படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமது படகுகள் மீது தாக்குதல் நடத்திய இரு படகுகளைத் தாம் அழித்ததாகவும் மேலும் கூறப்பட்டது.

இந்திய மீனவர்களின் அறுபதுக்கும் மேற்பட்ட படகுகளில் சந்தேகத்துக்குரிய இரண்டைக் கடற்படையினர் சோதனையிட முனைந்தனர் என்றும் -

சோதனைக்கு உட்படாது தப்புவதற்காக அந்தப் படகுகள் விடத்தல் தீவை நோக்கி விரைந்தன என்றும் - கூறப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## சண்டிலிப்பாயில் சிறுவர் பாதுகாப்பு குழு நிலையங்கள்

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகப் பிரிவில் சிறுவர் பாதுகாப்பு (இலங்கை) நிறுவனத்தின் அனுசரணையுடன் இரு கிராம மட்ட சிறுவர் பாதுகாப்பு குழு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.

மாதகல் கிழக்கு ஜே/150 கிராம அலுவலர் பிரிவிலும், ஆனைக் கோட்டை ஜே/133 கிராம அலுவலர் பிரிவிலும் கடந்த 26ஆம் திகதி இந்த நிலையங்கள் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு (இலங்கை) நிறுவனத்தின் யாழ். திட்ட இணைப்பாளர் எஸ். சர்மிளா இவ்விரு நிலையங்களையும் திறந்து வைத்தார்.

கிராமங்களிலுள்ள சிறுவர்கள் தொடர்பான தேவைகளை இனம் காணுதல், சிறுவர் தொடர்பான பிரச்சினைகளை கிராம மட்டத்தில் இனம் கண்டு ஒருங்கிணைக்கப்பட்டு, அவற்றை சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் உதவியுடன் தீர்த்து வைத்தல் ஆகியவற்றை இந்த சிறுவர் பாதுகாப்பு குழு நிலையங்கள் மேற்கொள்ளும் என்று வலி. தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார்.

(1-100-135)


**விற்பனைக்கு**

P I, P III, கணனிகள், ஸ்கீறின் பிறின்றிங் அச்சுப்பொருள்கள் உடன் விற்பனைக்கு உண்டு.

ஆலங்குழாய், சண்டிலிப்பாய்.

T.P. 0776557498.

**விற்பனைக்கு**

A.C. Window Model, G - 10 Deck, Type Writer - English (Olympia), Haier De - Freezer என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 137, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

10 வகுப்புகளில்.....

அதிக வருமானத்தை ஈட்டக் கூடிய தொழிலை பயில்வதற்கு குறைந்த கட்டணத்துடன் தயாராகுங்கள்!

**மணப்பெண் அலங்கரிப்பு**

பயிற்சிநெறி

**புதிய பிரிவு ஆரம்பம்**

02.08.2007

★ பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**தூரிகை நுண்கலை வளாகம்,**

ம.ம.வி.வீதி, நெல்லியடி.

(63004)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி செ.பாலசுப்பிரமணியம்**

கிராம அலுவலர் தரம் I J/306- நுணாவில் கிழக்கு கிராம அலுவலராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் இவரை, சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

பொ.செல்வரத்தினம் குடும்பம் (மட்டுவில்)

ச.நரேந்திரன் குடும்பம் (நுணாவில் கிழக்கு)

(62997)


**பிள்ளைகளுக்கானது!!!**

**சுயதிறன்- ஆளுமை மேம்பாட்டு செயல்களம்**

- ஆளுமை, விழுமியங்கள், சுய ஆற்றலினை வலுவூட்டுவதற்கும், அதிகரிப்பதற்குமான திறன் அறிவூட்டல் பயிற்சிகள்.
- மகிழ்ச்சிகரமான கற்றல் செயற்பாடுகளுக்கூடாக இயற்கையுடன் இணைந்த வலுவூட்டல் நிகழ்வுகள்.
- தனிப்பட்ட மதிப்பீடுகளுடன் கூடிய குழு செயற்பாடுகள்.
- மன ஒருமைப்பாடு, தொடர்பாடல், தலைமைத்துவம், ஆக்கத்திறன், பிரச்சினைகளைத் தீர்த்தல், பங்குபற்றல், தளர்வுறல், நுண்ணறிவு மற்றும் எண், மொழிசார் திறன்களை முதன்மைப்படுத்தும் செயற்பாடுகள்.
- நிபுணத்துவ மேற்பார்வையுடனும் ஆலோசனையுடனும் கூடியது.
- காலம் 120 மணித்தியாலங்கள் (4 மாதங்களில்)
  - பிரிவு (1) தரம் 3-தரம் 5
  - பிரிவு (2) தரம் 6-தரம் 8

பெற்றோர், பாதுகாவலர்கள் நேரடியாக வருகை தந்து பதிவினை மேற்கொள்ளவும்.

★ பதிவிற்கான இறுதித் திகதி: 07.08.2007

★ இடம்: சிறுவர் மகிழ்வகம்,

இல 45, செட்டித் தெரு,நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே. : 021 222 7080. (62996)


## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 22 - 06 - 1928



உதிர்வு 19 - 07 - 2005

திருமதி

**கிறேஸ் நேசமலர் செல்லையா**

ஏனென்றால் நீங்கள் மரித்தீர்கள் உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது.

நம்முடன் ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும் போது நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.

கொலோசேயர் : 3 : 34

பெருங்குளம் சந்தி,
சாவகச்சேரி.

(63010)

குடும்பத்தினர்

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

சிறுப்பிட்டி கலைமகள் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளியின் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சமூக அபிவிருத்தி மன்றத் தலைவி திருமதி நவநீதம் ஜெகதீஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 29

சுன்னாகம் ஐயனார் இளைஞர் கழகமும் சனசமுக நிலையமும் இணைந்து நடத்தும் ஜி.சீ.ஈ. (சாதாரண) தர மாணவர்களுக்கான கணித பாடப் பயிற்சிப் பரீட்சை இன்று காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரி, ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, ஏழாலை மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் இடம்பெறவுள்ளது. (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் திவ்ய ஜீவன சங்கத்தின் ஏற்பாட்டிலான குருபூர்ணிமா விழாவும் சங்கத்தின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி சி. கனகரத்தினத்தின் உருவப் படத்திரைநீக்கம் செய்யும் நிகழ்வும் இன்று காலை 9 மணிக்கு சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் மல்லாகம் நீதிபதி திருமதி சி. இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உப. அதிபர் ஆறு திருமுருகன், சட்டத்தரணி லிங்கா துரைராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (1)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை 29

அகில இலங்கைத் திருமுறைமன்றம் இன்று நடத்தும் திருமுறைப் பெருவிழாவில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவியும் தேவார இசைமணி கே.எஸ். ஆர். திருஞான சம்பந்தனிடம் தேவாரப்பண்ணிசை பயிற்சிபெற்றவருமான செல்வி மயூரதி குகநேஸ்வரன் கௌரவிக்கப்படவுள்ளார்.

இன்று காலை 6 மணிக்கு நாவலர் வீதியில் உள்ள கடையிற் சுவாமி குருவார அன்னசத்திர சிவன் ஆலயத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும். (1)


**திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன**

அந்த சொர்க்கம் எங்கே என அலைகிறீர்களா? உங்களுக்கு வேண்டாம் அந்த சிரமம். உங்கள் மகளின் / மகனின், சகோதரனின் / சகோதரியின், திருமணங்களுக்கு அலைகிறீர்களா? எல்லா வகையான சமூகத்தினருக்கும், சமயத்தினருக்கும், வெளிநாட்டு, உள்நாட்டு குறிப்புகளுடன் உங்கள் இஸ்டம் போல் தெரிவு செய்து திருமணம் செய்திட உடன் நாடுங்கள். சர்வதேச கிளைகளைக் கொண்ட

வாணி சர்வதேச திருமண நிலையம்

P.S.J. சிந்துஜன்,

அங்களாவை, வேலணை. தொ.பே. 0776184434, 0774047531

## வீடு வாடகைக்கு

**அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு.**

**தொடர்பு : க. சிவரத்தினம்**

**42/6, அம்மன் வீதி, கந்தர்டம்,**

**யாழ்ப்பாணம்.**

**விற்பனைக்கு**

A.C Window Model, G-10 Deck, Type Writer- English (Olympia) Hair De- Freezer என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 137, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.

## PMC யின் விசேட அறிவித்தல்

எமது நிறுவனத்தால் 05.08.2007 வெளியிடவிருந்த Master of English - VCD மாணவர்கள், வாடிக்கையாளர்கள் நன்மைகருதி மேலும் சிறப்புடன் தயாரிக்க இருப்பதனால் 10.08.2007 வரை பிற்போடப்பட்டுள்ளது. முற்பதிவு செய்து கொண்டவர்கள் 10.08.2007 காலை 10.00 மணிக்கு அலுவலகத்தில் VCD யைப் பெற்றுக் கொள்ளலாம். பாடசாலைகளில், கல்வி நிறுவனங்களில் பதிவு செய்து கொண்டவர்கள் பாடசாலைகள் விடுமுறை விடுவதால் தங்கள் வசிப்பு - முகவரியை தபால் மூலம் அனுப்பி வைக்கும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம்.

**PMC 443, ஸ்ரான்லி வீதி, அத்தியடி,**

**யாழ்ப்பாணம்**

**மணமக்கள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் [illegible], 1979இல் பிறந்த, [illegible] 72 [illegible] மணமகனுக்கு பொருத்தமான அழகிய மணமகள் தேவை. மணமகன் [illegible] வரவுள்ளார்.

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் [illegible], 1970இல் பிறந்த, [illegible] 20 [illegible] மணமகனுக்கு பொருத்தமான அழகிய மணமகள் தேவை. மணமகன் [illegible] வந்துள்ளார்.

தொடர்பு: P.S.J. Sinthujan.

அங்களாவை, வேலணை. தொ.பே. 0776184434, 0774047531

[illegible]


## துயர் பகிர்கின்றோம்

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர் திருமதி மேகலா விக்ரர் விஜயநாதன் அவர்களின் அன்புக் கணவர்

**கிறிஸ்தோத்திரம் விக்ரர் விஜயநாதன்**

அவர்களின் மறைவிற்கு வருந்துகிறோம். பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை.

(63015)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னையா வள்ளிப்பிள்ளை



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பொன்னையா வள்ளிப்பிள்ளை நேற்று (28.07.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னையாவின் அன்பு மனைவியும், கிருஷ்ணானந்தன், தெய்வேந்திரம், மனோன்மணி, புவனேஸ்வரி, காலஞ்சென்றவர்களான நடராசா, புனிதவதி மற்றும் வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் பொன்னம்பலம், திலகவதி, துரையப்பா, மயில்வாகனம் ஆகியோரின் மாமியும் திலகானந்தம், கிருஷ்ணவேந்தன், கிருஷ்ணவேனி, கிருஷ்னானந்தன், மைதிலி சந்தி, ராகினி, ராணி, நந்தகுமார், இந்திரா, உதயகுமார், சுமதி, சிவானந்தம், சிவகுமாரி, கிருஷ்ணராசா, ராசகுமார், பவிதகுமாரி, ரதிபாலரமணன் ஆகியோரின் பேர்த்தியும் கௌரி நாதன், இராசேந்திரம், இரகுநாதன், சந்தியபாமா, வித்தியா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2007) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணி அளவில் தகனக்கிரியைக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வராம்பற்றை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

(63018)

தகவல்:
புவனேஸ்வரி. (மகள்)

### ஆறுமுகம் மகேஸ்வரி

காரைநகர், சத்திரந்தையில் பிறந்தவரும் மலேசியாவில் வசித்தவருமான ஆறுமுகம் மகேஸ்வரி நேற்றுமுன்தினம் காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மலேசியாவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் வீதி,
இடைப்பிட்டி,
காரைநகர்.

(63017)

தகவல்:
பே. நடராசா
(சகோதரன்).

### சின்னத்தம்பி நடராசா



(சுன்னாகம் மதுபான நிலைய உரிமையாளர்)

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராசா நேற்று (28.07.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் பாக்கியலக்சுமியின் (முன்னாள் பிரேமானந்த நிலைய ஒருங்கிணைப்பாளர் - பூபாலகிருஷ்ண ஆச்சிரமம், சுன்னாகம்) அன்புக் கணவரும் தனுஷா, அருண் ஆகியோரின் தந்தையும் அனுஷாவின் (யா/ வருசப்புலம் வித்தியாலயம்) அன்பு பேரனுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.

தகவல்:
அருண் (மகன்).

### திருமதி குமாரலிங்கம் நாகேஸ்வரி



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரலிங்கம் நாகேஸ்வரி (28.07.2007) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரலிங்கத்தின் மனைவியும் மலர்மாலை, மனோரஞ்சிதம், குணநாயகி, செந்தமிழ்ச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயும் கருணைநாதன், இரஞ்சன், இந்திரதாசன், பிறேமச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2007) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிக உயர் பதவியை வகித்தபோதும் எளிமையாக வாழ்ந்து காட்டிய கலாம்

அவர் முதலில் ஓர் ஆசிரியர்.

தான் கற்றவற்றை தான் அறிந்தவற்றை தான் அனுபவத்தில் பெற்றவற்றை உலகுக்கு வழங்கவேண்டும் - வருங்கால சந்ததியினர் அதனால் பயன்பெற வேண்டும் என்ற துடிப்புள்ள ஆசிரியர்.

அதற்காகவே அல்லும் பகலும் யோசித்து, எழுதி திட்டமிட்டு வாழ்பவர்.

அவரது இரண்டாம் நிலையே விஞ்ஞானி என்பது.

''அறிவுக்கும் திறமைக்கும் ஏற்ற வேலையை வெளிநாடுகள் தருகின்றன என்று கூறி விமானம் ஏறுகிறவர்கள் உள்ள இக்காலத்தில் தாய்நாட்டு சேவைக்காகவே உறுதியுடன் இருந்து இந்தியாவிலேயே தனது திறமைகளை வளர்த்துக்கொண்டு உலக தரத்துக்கு இந்தியா உயர்வதற்கு வழிகாட்டியவர்'' அவர்.

விண்வெளியை ஆளும் சக்தி படைத்த நாடுகளின் வரைபடத்தில் இந்தியாவும் இடம்பெறுவதற்குக் காரணமாய் இருந்தவர்.

அப்துல் கலாம் இந்திய அரசின் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி வளர்ச்சி நிறுவனத்தின் இயக்குநராக இருந்தகாலத்தில், தம்முடன் வேலை செய்தவர்களை நடத்தியவிதம் பிறரை வியப்பில் ஆழ்த்துவதாக இருந்துள்ளது. அரச ஊழியர்கள் வழக்கமாக நடந்துகொள்ளும் முறையில் அவர்கள் பணிபுரியக் காணவில்லை. வேலை நேரம் முடிந்த பிறகும் வேலை செய்தார்கள். வார விடுமுறை தினங்களிலும் பணிபுரிந்தார்கள்.

இந்தநிலை இந்தியாவிலேயும் கூட வேறு எங்கும் காணமுடியாத ஒன்று.

### தவறிலிருந்து பாடம் படிக்கவேண்டும்

அவர் கூறுவார், ''வேலை செய்யும் இடத்தில் தவறு செய்கிறவர்கள் தாம் விடும் தவறுகளை ஒப்புக்கொள்கிறவர்களாய் இருக்க வேண்டும். அதேசமயம் தவறிலிருந்து பாடம் கற்றுக்கொள்பவர்களாயும் இருக்கவேண்டும்'' என்று.

கலாமின் இந்தத் தத்துவம் செயற்கைகோள் செலுத்தும் பணியில் மிகப் பொருத்தமாக இருந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது.

ஏவுகணை செலுத்தும் வாகனமான எஸ்.எல்.வியின் முதல் பரிசோதனை தோல்வியில் முடிந்தது. ஆனால் அதில் ஏற்பட்டிருந்த தவறுகள் கண்டறியப்பட்டு அதற்கடுத்த ரொக்கெட் வெற்றிகரமாக செலுத்தப்பட்டு இத்துறையில் சாதனை படைத்துள்ள நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இடம்பிடித்துக் கொண்டது.

அப்துல் கலாம் அரசியல்வாதியல்ல. ஆனால், அரசியல்வாதிகளுக்கும் முன்னுதாரணமாக திகழ்ந்துள்ளார்.

ஆதாயம் தரும் பதவிகள் தொடர்பான மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு வந்த போது அதைத் திருப்பி அனுப்பினார். ஒருவர் இரு பதவிகள் வகிப்பது நியாயமாகாது என்பது அவர் கொள்கை. வெளிப்படையான நிர்வாகம், ஊழல் இன்மை, நிர்வாகத்திறன், நேர்மை ஆகியவற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினார்.

### நவீன காந்தியாக வாழ்ந்தார்

நவீன காந்தியாக வாழ்ந்து குடியரசுத் தலைவர் பதவிக்கே பெருமை சேர்த்தவராவார்.

2020ஆம் ஆண்டளவில் இந்தியாவும் வல்லரசு நாடாக வளர்ந்து திகழவேண்டும் என்பது அப்துல் கலாமின் ஆசை. இதுவே இந்திய நாட்டு இளைஞர்களின் கனவாகவும் இருக்கவேண்டும் என்று அதற்காக அவர்களை தயார் செய்யும் பணியிலும் ஈடுபட்டார். செல்லும் இடமெல்லாம் இளம் சந்ததியினரை சந்திப்பதையும் அவர்களின் சிந்தனையைத் தட்டி விடுவதையும் தவறாது மேற்கொண்டு வந்தார்.

### கடுமையான சுயக்கட்டுப்பாடு

கலாம் மிகக் கடுமையான சுயக்கட்டுப்பாடு கொண்டவர். தனி மனித ஒழுக்கத்தைக் கண்டிப்புடன் பேணுபவர். புலால் அருந்தாதவர். மது அருந்துதல், புகை பிடிக்கும் பழக்கம் இல்லாதவர்.

குடியரசுத் தலைவர் பதவியை ஏற்றதிலிருந்து அவர் கடுமையாக உழைத்துள்ளார். காலை 5.30 மணிக்கு எழும்பி அவர் இரவு ஒரு மணி அல்லது 2 மணிக்குத் தான் உறங்கச் செல்வார்.

கலாம் பதவியிலிருந்து விலகி ஜனாதிபதி மாளிகையிலிருந்து வெளியேறிய போது அவருக் குச் சொந்தமான சில பொருள்களுடன் கூடிய இரண்டு சூட்கேஸ் பெட்டிகளை மட்டுமே எடுத்துச் சென்றுள்ளார். அதற்குமுன் அதே பதவியிலிருந்தவர்கள் பல வாகனங்களில் தம் பொருள்களை எடுத்துச் சென்றுள்ளார்கள். கலாம் தாம் விலை கொடுத்து வாங்கிய நூல்களை எடுத்துச் சென்றுள்ளார். பதவியிலிருந்த காலத்தில் கிடைத்த பரிசுப் பொருள்கள் எதையும் அவர் எடுத்துச் செல்லவில்லையாம்.

கலாமின் உறவினர்கள் அவர் பதவி விலகியதும் ராமேஸ்வரத்தில் தங்கள் பூர்வீக கிராமத்துக்குத் திரும்பி தங்களுடன் வாழவேண்டும் என்று விரும்புகின்றார்கள்.

### புதுடில்லியில் அரசின் ஆலோசகராக அமரும்படி இந்திய அரசு கேட்கின்றது

இந்தியாவிலுள்ள பல கல்வி நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களில் வருகை தரும் பேராசிரியராகப் பணிபுரிய அழைத்தபடி இருக்கின்றனர். ஆனால், அப்துல் கலாம் முன்பு தாம் பணிபுரிந்த அண்ணா பல்கலைக்கழகத்திற்கே திரும்பி கல்விப் பணியைத் தொடர விரும்புகின்றார். அங்கு தமக்கு பெரிய வசதியான பங்களா ஏதும் தேவையில்லை, ஓர் அறை மட்டும் தங்குவதற்கு இருந்தால் போதும் என்று கூறியுள்ளாராம்.


இந்திய நாடு 2020ஆம் ஆண்டில் சூப்பர் வல்லரசாக மாறவேண்டும். அப்போது இந்தியாவில் சாதிப் பிரச்சினையே இருக்கக் கூடாது என்று விருப்பம் தெரிவித்துள்ளார் அப்துல் கலாம்.

75 வயதான அப்துல் கலாமை மீண்டும் குடியரசுத் தலைவர் பதவியில் அமர்த்துவ தற்கு அண்ணா தி.மு.க.முதற்கொண்டு பல எதிர்க் கட்சிகள் முயற்சித்தன. வெற்றி பெறும் வாய்ப்பிருந்தால் மட்டுமே போட்டியிட முடியும் என்று கூறி மரியாதையாக அந்த இக்கட்டிலிருந்து விடுபட்டுவிட்டார்.

ஓய்வு என்பதையே நினைத்தும் பார்க்க விரும்பாத அப்துல் கலாம் மீண்டும் கல்வித் துறையில் 'பிஸி'யாகி விடுவார்.

### தமிழ்ப் பற்று மிக்கவர்

தமிழ்நாடு ராமேஸ்வரத்தில் வறிய குடும்பமொன்றில் பிறந்த அப்துல் கலாம் தனது ஓயாத உழைப்பாலும் சிந்தனையாலும் அறிவியல் விஞ்ஞானியாக மட்டும்உயரவில்லை. இந்திய நாட்டு மக்கள் அனைவருமே விரும்பி மதிக்கும் குடியரசுத் தலைவராகவும் உயர்ந்தவர்.



இந்தியாவின் ஏவுகணைகளின் தந்தை என்று வர்ணிக்கப்படும் அப்துல் கலாம் தமிழ் பற்றுமிக்கவர். திருக்குறள் கற்றவர். தமது முக்கியமான ஆங்கிலச் சொற்பொழிவுகளில் தமிழ் மொழியிலிருந்து பொருத்தமான மேற்கோள்களை எடுத்துவிடுவார். வேத, இதிகாசங்கள், உபநிடதங்கள், மகாபாரதம், மனுஸ்மிருதி போன்றவற்றிலும் ஈடுபாடு கொண்டவர்.

### முன் உதாரணம் இல்லாத தகுதிகள்

ராஷ்டிர பதியாவதற்கு முன்பே பாரத ரத்னா விருது பெற்றவர். ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற


**- நந்தன் -**

முதல் விஞ்ஞானி, திருமணமாகாதவர், அரசியல் கட்சிகளைச் சாராதவர், இமயத்தில் மிக உயரமான போர்க்களத்துக்குப் போய் வந்தவர், நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்த ஜனாதிபதி, வேகமாகப் பறக்கும் போர் விமானத்தில் பறந்தவர், எங்கு சென்றாலும் படிக்கும் இளம் சந்ததியினரை சந்தித்து அவர்களை தாய்நாட்டின் பால் விழிப்புணர்வு கொள்ளச் செய்தவர், சிக்கனத்தைக் கடைப்பிடித்து எளிமையாக வாழ்ந்தவர். பரிசுப் பொருள்களை எவரும் வாங்கலாகாதெனக் கூறி அவ்வாறே வாழ்ந்து காட்டியவர்.

இவ்வாறெல்லாம் தனித்துவ சிறப்பு மிக்க அப்துல் கலாமிடம் பயிலப் போகும் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் அதிர்ஷ்டசாலிகள். ★

# மக்களையும் கூட்டுறவையும் பாதுகாப்பதற்கான அறிவு அத்துறை சார்ந்தோருக்கு மிகவும் அவசியம்

*அனைத்துலக கூட்டுறவாளர்களையும் நினைவு கூரும் காலம் ஜூலை மாதம். அதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.*



கூட்டுறவுப் பெரியார் **வீ.வீரசிங்கம்**

உலகில் உற்பத்திச் சாதன வளர்ச்சியும் அதன் சமூக பிரதிபலிப்புகளும் ஒரு வரலாற்று தொடர்கதை. இது மனிதமூளையின் விருத்தியினூடாக பிறந்த மேம்பாடு. மனிதனை மிருகங்களிடமிருந்து வேறுபடுத்தி உயர்வாழ் நிலையை நோக்கி நகர்த்தியது. இவ்வாறான நகர்வு பல சமூக அமைப்புகளை தோற்றுவித்தன. புதிய உற்பத்திச் சாதனங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதன் அனுகூலங்களை மனிதன் அனுபவிக்கத் தொடங்க, அதன் எதிர் விளைவுகள் தோற்றம் பெற்றன. உள்ளான், இல்லான் என மக்கள் இரு அணிகளாக, வர்க்கங்களாக இனங்காணும் நிலை ஏற்பட்டது. உள்ளான் சிறிய எண்ணிக்கையாகவும் இல்லான் கூடிய எண்ணிக்கையாகவும் சமூக பிரிவு ஏற்பட்டது.

### கைத்தொழில் புரட்சியின் விளைவு

18ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத் தொழில் புரட்சியின் விளைவாக முதலாளித்துவ சமூகம் தோற்றம் பெற்றது. முதலாளித்துவம் தொழிலாளர்களையும் வறிய மக்களையும் மிகமோசமாகச் சுரண்டியது. தொழிலாளர்கள் சொல்லொணாத்துயரங்களை அனுபவித்தனர். இம் மக்களின் துயரம் துடைக்கப் பல சிந்தனையாளர்கள் பல தத்துவங்களை முன்வைத்தனர்.

அவர்களுள் கூட்டுறவுத் தத்துவங்களை முன்வைத்தவர்களுள் றொபேட் ஓவன் முதன்மை பெறுகின்றார். அவரின் தத்துவத்தின் அடிப்படையில் முதன்முதலாக இங்கிலாந்தில் 1844 ஆம் ஆண்டு நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நடைபெற்றது. ஆதலால் உலக கூட்டுறவாளர் 1844 ஆம் ஆண்டை கூட்டுறவு இயக்கத்தின் தோற்ற ஆண்டாக கொள்கின்றனர்.

புனித தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு இங்கிலாந்தில் கூட்டுறவு இயக்கம் தோற்றம் பெற்றாலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும், மற்றைய நாடுகளுக்கும் பரவி மக்களுக்கு மகத்தான சேவை செய்கின்றது. மக்களுக்கு, இன, மத, பிரதேசவேறுபாடின்றி, துயர் துடைத்து சமூக மேம்பாட்டிற்கு [illegible] உழைப்பதால் கூட்டுறவு இயக்கம் சர்வதேச ரீதியாக ஸ்தாபனம் அமைத்துச் செயற்படுகின்றது.

கூட்டுறவு ஸ்தாபனங்கள் சர்வதேச அமைப்பு முதலாவதாக 1895இல் தோற்றம் பெற்றது. அது மக்களுக்கு சமத்துவம், சகோதரத்துவம், ஜனநாயகம் உள்ளடங்கிய வாழ்வை வழங்கும் நோக்குடன் கூட்டுறவுக் கொள்கைகளை மெருகூட்டிச் செயற்படுத்தியது. 1937இல் சீர் செய்யப்பட்டு செயற்பட்ட சர்வதேச கூட்டுறவுக் கொள்கைகள் மாறி வந்த சர்வதேச சூழலுக்கேற்ப 1967இலும் 1995இலும் சிறுமாற்றங்களுக்குட்பட்டது. இவற்றை சர்வதேச கூட்டுறவுச் சமூகம் ஏற்றுச் செயற்படுத்துகின்றது.

கூட்டுறவுச் சமூகத்தின் செயற்பாட்டை விசாலமாக்கி, ஆழமாக்கிச் செயற்பட செய்வது பின்வரும் கொள்கைகளாகும்.

1. தன் விருப்பார்ந்த தடையற்ற அங்கத்துவம்
2. ஜனநாயக நிர்வாகமும் கட்டுப்பாடும்
3. அங்கத்தவரின் பொருளாதாரப் பங்களிப்பு
4. சுதந்திரமாகவும் சுயமாகவும் தொழிற்படல்
5. கல்வி, பயிற்சி, தகவல் திரட்டல்
6. கூட்டுறவுச் சங்கங்களுக்கிடையே கூட்டுறவு
7. சமூக மேம்பாடு

### செயற்படும் மட்டங்கள்

இவ்வேழு கொள்கைகளும் வானவில்லிலுள்ள ஏழு வர்ணங்களின் பிரதிபலிப்பாகக் கொள்ளப்படுகின்றது. இவற்றைத்தாங்கியது தான் கூட்டுறவுக் கொடி.

இந்த உன்னதமான கொள்கைகளைச் செயற்படுத்தும் ஸ்தாபனங்கள் பின்வரும் தளங்களில் செயற்படுகின்றன.

1. கிராம மட்டம்
2. மாவட்ட மட்டம்
3. மாகாண மட்டம்
4. தேசிய மட்டம்
5. சர்வதேசிய மட்டம்

இது கூட்டுறவுச் சமூகத்தின் ஸ்தாபன வலைப்பின்னலாகும்.

இலங்கையில் கூட்டுறவு தோற்றம் பெற்று செயற்படும் காலம் நூற்றாண்டைத் தாண்டியுள்ளது. ஆரம்பத்தில் ஐக்கிய நாணய சங்கங்களாகவும் நுகர்வோர் சங்கங்களாகவும் ஆரம்பித்த கூட்டுறவு இயக்கம் இன்று எல்லாத் துறைகளையும் உள்ளடக்கியுள்ளது என்றால் மிகையாகாது. முதலாவது கூட்டுறவுச் சங்கம் தெல்தேனியவில் தும்பரையில் 1911ஆம் ஆண்டும், யாழ். மாவட்டத்தில் கரவெட்டியில் 1916ஆம் ஆண்டும் தோன்றியதாகப் பதிவுகள் காட்டுகின்றன.

இங்கிலாந்தில் கூட்டுறவின் முன்னோடியான றொபேட் ஓவன்போலையும் எமது பிரதேசத்தின் கூட்டுறவின் முன்னோடியாகப் பெரியார் வி.வீரசிங்கத்தைக் கொள்ளலாம். அவர் கூட்டுறவிற்கு ஆற்றிய சேவை அவரைத் தேசிய கூட்டுறவுத் தலைவராக்கியது.

அனைத்துலகக் கூட்டுறவாளர் தினம் ஆண்டு தோறும் ஜூலை மாதத்தில் முதலாவது சனிக்கிழமையில் கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டு 7-7-7 எமது பிரதேசத்தில் மிகவும் எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது. அவ்வாறு கொண்டாடும் அதேவேளை- முதலாளித்துவத்தின் உலகமயமாக்கல் திட்டத்தின் கீழ சந்தைப் பொருளாதார செயற்பாட்டால் கூட்டுறவுச் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை முகம் கொடுத்து மக்களையும் கூட்டுறவாளரையும் பாதுகாக்க போதிய அறிவைக் கூட்டுறவாளருக்கு வழங்கி, கூட்டுறவுத் தொழிற்பாட்டை மூவினங்களையும் சார்ந்த கூட்டுறவாளர்களை உள்ளடக்கி முன்னெடுக்கத் திடசங்கற்பமெடுப்போமாக. இது பெரியார் வி.வீரசிங்கத்திற்குச் செய்யும் பெரும் கௌரவமாகும். ★

**-சி.இராமச்சந்திரா-**

# வலிகாமத்தின் வளமான பகுதிகளில் மீண்டும் பரவி வரும் பாதீனியம்

யாழ்.குடாநாட்டில் வலிகாமம் பகுதியில் செழுமையான மண்ணின் வளத்தை நாளுக்கு நாள் பாதீனியம் விழுங்கும் அபாயம் நிகழ்ந்து வருகின்றது. இவற்றை அடியோடு அழிக்காவிடில் அவை நம்மை முடிவில் அழித்துவிடும் பாதக நிலை காணப்படுகின்றது.

எமது கவனயீனமே அதன் வளர்ச்சி பன்மடங்காக பெருகக் காரணம். எமது சொந்த காணிகளின்

### அதனை அழிக்க உடனடியாக அனைவரின் ஒத்துழைப்பும் தேவை

எல்லையில் ஒரு சிறுதுண்டு நிலம் கூட இழக்க நேரிட்டால் மல்யுத்தம், வாள் சண்டை என்பவற்றில் ஈடுபடுகின்றோம். இதைவிட நீதிமன்றங்களில் வழக்குகள் என பல ஆயிரம் ரூபாய்களைச் செலவிடுகின்றோம். ஆனால், அந்த மண்ணின் வளத்தை காணியின் மத்தியில் பாதீனியத்திடம் பறிகொடுத்துக்கொண்டிருக்கின்றோம்.

இவை முதல் [illegible] இந்தியாவில் இருந்து 1987ஆம் ஆண்டு [illegible] காக்கும் படையினரின் வருகையின்போது அவர்களின் உணவுத் தேவைக்காக கொண்டுவரப்பட்ட கால்நடைகள் (ஆடு) மூலமே பரவ ஆரம்பித்தது. இந்தியாவில் இருந்து எடுத்துவரப்பட்ட கால்நடைகள் அதனை விதைகளுடன் உண்ட பின் இங்கு கொண்டு வரப்பட்டமையால் அவற்றின் கழிவுகள் மூலமே விதைகள் பரவியது. அத்துடன் அவை காவலரண், முகாம் அமைந்த பகுதிகளில் முன்னர் காணக்கூடியதாக இருந்தது. பின் அவை பாதசாரிகள், விலங்குகள் மூலம் தற்போது பிரதான வீதியின் இரு மருங்கிலும் பன்மடங்காக பெருகியது. அதன் பின்னர் விதைகள் காற்றின் மூலம் தோட்ட நிலங்களிலும் தரிசு நிலங்களிலும் பரவிவிட்டன. முன்னர் இவை உவர்நிலங்களில் பரவாது என்ற கருத்து இருந்தபோதும் தற்போது உவர்நிலங்களில் செழிப்புத் தன்மை குறைவாகக் காணப்பட்டாலும் பரவியுள்ளது. ஆனாலும் இவை யாழ்.குடாநாட்டின் செழுமையான மண்வளமான வலிகாமப் பகுதியிலேயே ஆட்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் சிறிய அளவிலே வடமராட்சி, தென்மராட்சி, தீவகங்களிலும் காணப்படுகின்றது. எனவே பொது மக்களாகிய நாம் இவற்றை முறையாக ஒழித்துவிடுவதாகச் சபதம் பூணுவோம்.

தற்போது இப்பாதீனிய ஒழிப்புத் திட்டத்தினை வலி.கிழக்குப் பிரதேச சபை செயலாளரின் பணிப்பிற்கு ஏற்ப உள்ளூராட்சி உதவியாளரின் வழிகாட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனை அமுல்படுத்த 2007ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தின் கீழ் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்திற்கு அனுமதி கிடைக்கும் பட்சத்தில் பாரிய அளவில் இதனை முன்னெடுக்கவுள்ளோம். இதன் முதற்கட்டமாக வீதியோரங்கள், பராமரிப்பு அற்ற காணிகளில் காணப்படும் பாதீனியச் செடிகளை அகற்றுதல் ஆகும்.

**செ.செல்வானந்தம்,**
**தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்),**
**வலி.கிழக்குப் பிரதேச சபை.**

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# First & Best To Carry Away

**UNISTA** Price
Intel D 2.8 LGA Processor
Intel Core 2 duo Support Mother Board
256 Mb DDR1/2 Ram
80 Gb Hard disk 7200RPM
ATX Case with 450/500W Smps
DVD/CD_RW Combo
15" Digital Color Monitor
Keyboard
Mouse
Speaker
For 44,500 Hands On Stock

**UNIPRO**
Intel P4 3.0/2M cache LGA Processor
Intel 945 Mother Board
Kingston 512 Mb DDR2 Ram
80 Gb Sata 7200RPM 3.0 Gbps DT
ATX Case with 450/500W Smps
DVD-RW
IBM 15" LCD Monitor
Keyboard
Mouse
Speaker
63,500 Only

**UNIDUAL**
Intel Pentium D 3.0/4M Dual Core LGA
Intel 945 Mother Board
1 Gb Kingston DDR2 Ram
160 Gb Sata 7200RPM 3.0 Gbps DT
DVD-RW
ATX Case with 500W Smps
17" ViewSonic Wide LCD
MultiMedia Keyboard
Optical Mouse
Speaker
75,500 Rush

AsRock LGA 5750/- ASUS LGA 8900/-
BioStar 8250 Intel Original 13500/-
478 AsRock 7750/- Intel Original 13000/-
COMBO 4250/- DVD-RW 5750/-
Mouse 300/-, 550/-, 650/- 800/-, 1600/- & 1800/-
Canon Laser Printer - 22000/-
Keyboard/Speaker 800/-
Internal or External TV Tuner 4900/-
All Type of Processors,Ups, Toners & Etc

also available LCD to CRT Change

Woofers 2.1,4.1 & 5.1

ReConditioned P4 System For Sale

UNIT
மனோகரா தியேட்டர் சந்தி
347, K.K.S Road, Jaffna
Ph:021-4590720


## வலிகாமத்தில் வளமான.......

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்திட்டம் பூரணமாகப் பூர்த்தி அடையுமாயின் 60 வீதமானவை அழித்து விட முடியும். முற்றாக இதனை அகற்றுவதாயின் மேலும் இரண்டு ஆண்டு காலம் எடுக்கக் கூடும்.

இச்செடியினை அகற்றும்போது பூக்கள், விதைகள் உருவாவதற்கு முன்னர் பிடுங்கி அல்லது கிருமிநாசினியை உபயோகித்து அழிக்க வேண்டும். சிலர் விதை உருவாகிய பின் அழிப்பதினை காணக்கூடியதாகவுள்ளது. அதன்போது அவற்றின் விதைகள் மீள மண்ணில் பரவுகின்றன. சில பொதுமக்கள் அவற்றின் விதைகளுடன் அகற்றி ஓரிடத்தில் குவியலாக இட்டுவிடுகின்றனர். இவை யாவும் முற்றாக அழிக்க வழிகோலாது. எனவே செடிப்பருவத்தில் பிடுங்கி ஓரிருநாள்கள் வாடிய பின் எரியூட்டி அழிக்கவேண்டும். இதன்மூலமே வெற்றிக்கனியை அடையலாம். இதுவே சாலச் சிறந்த வழியாகும்.

அத்துடன் இதனை கட்டுப்படுத்தி அழிப்பதற்காக ஏற்கனவே உதயன் நாளிதழில் 2000ஆம் ஆண்டளவில் விவசாயப் பிரிவால் கருத்துக்களையும் செடியின் படங்களுடன் விழிப்புணர்வு ஏற்படுத்தியமை யாவரும் அறிவோம். அக்காலப் பகுதியில் பிரதேச சபைகள் அவற்றை முற்றாக அழிக்கும் திட்டத்தினை நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இச்செடிகள் வளர விடுவது தண்டைக்குரிய குற்றம் என பதாகைகள் வவுனியா நகரப் பகுதியில் காணப்படுகின்றது. ஆனால் இதுவரை முற்றாக கட்டுப்படுத்தப்படாமைக்கு பொதுமக்களின் கவலையீனமே காரணம். இனி வரும் காலங்களிலாவது இதனை முற்றாக அகற்ற பொதுமக்களின் பூரண ஒத்துழைப்பு தேவை. *


# ஒரு மருத்துவர் ஆகுங்கள்




கிழக்கு ஐரோப்பாவில்
பட்டம் பெறுங்கள்
மருத்துவத்தில் கலாநிதி-MD
ஆங்கிலமூலம்



இலங்கை மருத்துவ சபையின் அங்கீகாரம் பெற்றது

NOW 0% INTEREST INSTALLMENT PLAN BY MAJOR CREDIT CARDS

பரீட்சைகள் சட்டம் 16 இற்கு சம நிலையில் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

வேறு பல்கலைக்கழகங்களில் இருந்து இடமாற்றம்.
பொறியியல் [தகவல் தொழில் நுட்பம்] மற்றும் பாடநெறிகள் உண்டு.

இன்றே பதிவு செய்க, உடனே விமானப்பயணம், அனுமதிகள் மற்றும் விசாரணைகளுக்கு: 0773017883.

PATHE ACADEMY
Overseas Student Placement Department
37, School Lane(Entrance from Duplication Rd.) Colombo 03.
Tel: 5377752, 2502012, 2591271. www.patheacademy.org


# ஏழாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 26 . 06 . 1941

மறைவு 14 . 08 . 2000

ஆண்டுகள் ஏழு ஓடிமறைந்தாலும்
ஆறமறுக்கின்றன எம் நெஞ்சம்.
பாசத்தில் எங்களை மகிழ்ச்சியாக வைத்திருந்தீர்கள்!
பாதியில் உமை நாமிழந்தோம், ஏங்கினோம்....!
உங்கள் நினைவுகளில் நாங்கள் வாழ்வதால்
இந்த அகிலம் உள்ள வரை
உங்கள் வாழ்வு தொடரும்.....!
"நீத்தல், வாழ்வின் முடிவு அல்ல;
புதியதொரு புனித வாழ்வின் தொடக்கம்."

## அமரர்
## திரு. தம்பிப்பிள்ளை சிவஞானசுந்தரம்

(இளைப்பாறிய பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)

பிள்ளையார் வீதி, திருநெல்வேலி தெற்கு, திருநெ[illegible]

-குடும்பத்தினர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்தின் சிறுகதை மூலவர்களான மூன்று பேரில் ஒருவர் சி.வைத்திலிங்கம். முதன் முதலில் 1939இல் ஈழகேசரியில் அவரது சிறுகதை வெளிவந்தது. தமிழகச் சஞ்சிகைகளான ஆனந்தவிகடன், கலைமகள் ஆகியவற்றிலும் அவரது சிறுகதைகள் பிரசுமாகின. அவர் எழுதிய சிறுகதைகளில் பல "கங்கா கீதம்" என்ற தொகுதியாக வெளிவந்தது.

வரலாறுகளை அடிப்படையாகக் கொண்ட சிறுகதைகளுடன் பல சமூகக் கதைகளையும் அவர் எழுதியுள்ளார். அந்தக் காலத்து யாழ்ப்பாணத்துச் சமூகப் பின்னணியைக் கொண்டு சிறுகதைகள் படைத்தது போன்று சிங்களக் கிராமங்களையும் பகைப் புலமாகக் கொண்டும் கதைகள் எழுதினார். அவர் அரசாங்க அதிகாரியாகச் சிங்கள மாவட்டங்களில் பணிபுரிந்தவர். "நெடுவழி" என்ற சிறுகதை அத்தகையவற்றில் ஒன்று.

ஏழைக் குடும்பம் ஒன்றின் நிறைவேறாத ஆசைகளை இந்த "பாற்கஞ்சி" யில் வெளிப்படுத்துகிறார். அந்தக் காலத்து யாழ்ப்பாணத்தின் கிராமப்புற வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது இக்கதை. படித்துப் பாருங்கள்.

# பாற்கஞ்சி

"ராமு, என் ராசாவன்னா குடுச்சிடுவாய், எங்கே நான் கண்ணை மூடிக்கொள்கிறேன். குடிச்சிடுபார்க்கலாம். நாளைக்குப் பாற்கஞ்சி...."

"சும்மா போம்மா, நாளைக்கு நாளைக் கென்று எத்தனை நாளா ஏச்சுப்பிட்டாய். என்ன தான் சொல்லேன். கூழ் குடிக்க மாட்டேம்மா".

" இன்னும் எத்தனை நாள் பஞ்சமடா? வயலிலே நெல் முத்தி விளைஞ்சு வருது. ஒனக்கு வேணாம்னா பாற்கஞ்சி தாரனே"

"கூழைப் பார்த்தாலே வவுத்தைப் புரட்டுதம்மா. முடியாதுன்னா முடியாது" என்று சொல்லி அழத் தொடங்கினான்.

"அப்பா பசியோட காத்திண்டிருப்பா ரடா வயல்லே. கூழ் கொண்டு போகணும். என்ன பாடுபட்டும் நாளைக்குக் கஞ்சி தந்துடுறனே. ஆம்..... என் கண்ணோல்லியோ"

"நிச்சயமாய்ச்சொல்றயாம்மா? நாளைக்கு பாற்கஞ்சிதருவாயா?..."

சட்டென்று பக்கத்திலிருந்து சிறுவர்கள் தம்பளப்பூச்சி பிடித்து விளையாடும் சப்தம் கேட்டது. அவதி அவதியாய் பத்து வாய் கூழ் குடித்தான் ராமு. எல்லாவற்றையும் மறந்து விளையாட ஓடினான்.

அந்தக் கிராமத்தில் முருகேசனுடைய வயல் துண்டு நன்றாய் விளையும் நிலங்களில் ஒன்று; அதற்குப் பக்கத்திலே குளம். குளத்தைச் சுற்றிப் பிரமாண்டமான மருதமரங்கள். தூரத்திலே அம்பிகையின் கோவிற் கோபுரம். இவை எல்லாவற்றையும் சுற்றி வேலி போட்டாற்போல தூங்கிக் கிடந்தன குடிமனைகள்.

மார்கழி கழிந்துவிட்டது. இப்பொழுது மேகத்திலே புகார் ஓடுவதில்லை. ஞான அருள்பெற்ற நாள் வெண்ணிறம் பெற்று வந்தது. ஆம் தைமாதம் பிறந்து துரிதமாய் நடந்து கொண்டிருந்தது.

மாரிகாலம் முழுவதும் ஒய்ந்து தூங்கிக் கிடந்த ஜீவராசிகள் பாட்டுடன் வேலை தொடங்கிவிட்டன. முருகேசனும் வயலிலே வேலை செய்துகொண்டிருந்தான். பனியிலே ஒடுங்கிக் கிடந்த நரம்புகளிலே சூரியஒளி வெள்ளம் பாயவே, அவன் தேகத்தில் ஒரு சுறுசுறுப்பு உண்டானது. வலிந்து இறுகியிருந்த நரம்புகள் வின் போல் தெறித்தன. எழுந்து நின்று கண்களைச் சுழற்றித் தன் வயலைப் பார்த்தான். நெற்கதிர்கள் பால் வற்றி, பசுமையும், மஞ்சளும் கலந்து செங்காயாக மாறிக்கொண்டிருந்தன. "இன்னும் பதினைந்து நாள்களில்..." என்று அவனை அறியாமல் அவன் வாய் முணுமுணுத்தது.

முருகேசன் மனதிலே பூரிப்பு, ஒரு ஆறுதல், ஒரு மன அமைதி. அவன் ஒரு வருடமாய் பாடுபட்டது வீண்போகவில்லை அல்லவா? ஆனால் இவற்றிற்கு இடையில் காரணமில்லாமல், "சிலவேளை ஏதேனும்.... யார் கண்டார்கள்?" என்ற இன்பமும் துன்பமும் கலந்து ஒரு மன ஏக்கம்....!

முருகேசனுக்கு வயலை விட்டுப்போக மனம் வரவில்லை. பொழுது உச்சிக்கு வந்துவிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்றாலும் பயிருக்குள் நுழைந்து ஒவ்வொரு கதிராகத் தன் கைகளால் அணைத்துத் தன் குழந்தைகள் போலத் தழுவிக்கொண்டிருந்தான்.

கண்ணை மின்னிக்கொண்டிருந்த அந்த வெயிலிலே காமாட்சி கூழுடன் அப்பொழுதுதான் வந்தாள். கூழ் குடித்துக் கொண்டிருக்கும்பொழுது முருகேசன் அவளைப் பார்த்து, "போன வருசந்தான் மழை இல்லாமல் எல்லாம் சப்பையும் சாவியுமாய்ப் போயிருத்து. காமு, அதோ பார். இந்த வருசம் கடவுள் கண் திறந்திருக்கிறார். கருப்பன் செட்டி கடனைத் தீர்த்துப்புட லாம். நமக்கு ஒரு வருடத்துக்குச் சோத்துக்குக் குறைவு வராது. எங்க ராமனுக்கு ஒரு சோடிக் காப்பு வாங்கணும்...."

"எனக்கு ஒட்டியாணம்"

"ஏன், ஒரு கூறைச்சேலையும் நன்னாயிருக்குமே"

'ஆமாங்க, எனக்குத் தான் கூறைச் சேலை, அப்படின்னா ஒங் களுக்கு ஒரு சரிகை போட்ட தலப்பா வேணுமே"

"அச்சா, திரும்பவும் புது மாப்பிள்ளை பொம்புளையாட்டம் ரெண்டு பேரும்...ஓ...ஒரே சோக்குத்தான்" என்று சொல்லி அவளைப் பார்த்து இளித்தான்.

காமாட்சி வெட்கத்தினால் தன் சீலைத் தலைப்பால் முகத்தை அரை குறையாய் மூடிக்கொண்டு "அதெல்லாம் இருக்கட்டும்... எப்போ அறுவடை நாள் வைக்கப் போறீங்க" என்றாள்.

"இன்னிக்குச் சனிக்கிழமை, சனியோடுசனி எட்டு, மற்றச்சனி பதினைந்தாம் நாள் நல்லநாள். அதே சனிக்கிழமை வைத்திடுவமே"

"தாயே இதுக்கிடையில் ஒரு விக்கினமும் வந்திடப்படாது" என்று மனதில் சொல்லிக்கொண்டாள்.

ஒரு பெருநாளைஎதிர்பார்ப்பது போல்காமாட்சியும்முருகேசனும் அறுவடை நாளை எதிர்நோக்கி இருந்தார்கள். காமாட்சி தன் வீட்டில் உள்ள களஞ்சிய அறையைக் கோலமிட்டு மெழுகி வைத்திருந்தாள். லஷ்மி உறையப் போகும் அந்த அறைக்கு ஒவ்வொரு நாளும் தீபம் ஏற்றி வந்தாள். மணையாகக் கிடந்த அரிவாள்களைக் கொல்லன் பட்டடையிற் கொண்டுபோய்த் தேய்த்து வந்தான் முருகேசன். கதிர்ப்பாய்களை வெயிலிலே உலர்த்தி, பொத்தல்களைப் பனை ஓலை போட்டு இழைத்து வைத்தான். ஐந்தாறு நாள்களுக்கு முன் னரே அயல்வீட்டுக் கந்தையனிடமும் கோவிந்தனிடமும் "அறுவடை, வந்திடவேணும் அண்ணாமாரே" என்று பலமுறை சொல்லி வந்தான். இருவடைய மனதிலுய் ஓர் ஆவல் துடித்து நின்று இவற்றை எல்லாம் செய்துவந்தது.

அறுவடை நாளுக்கு முதல்நாள் அன்று வெள்ளிக்கிழமை. பகல் தேய்ந்து மறைய இன்னும் மூன்று நாழிகைதான் இருந்தது. நிஷ்களங்கமாய் இருந்த வானத்திலே ஒரு கருமுகிற்கூட்டம் கூடியது. வரவரக்கறுத்துத் தென்திசை இருண்டு வந்தது. அந்த மேகங்கள் ஒன்று கூடி அவனுக்கு எதிராகச் சதி செய்வதாக முருகேசன் நினைத்தான். அந்தக் கருவானம் போல் அவன் மனதிலும் இருள் குடிகொண்டது. காமாட்சி அவள் மனதிற்குள் அம்பிகைக்கு நூறு வாளித் தண்ணீரில் அபிஷேகம் செய்வதாகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் ஒரு காற்று அடித்துக் கூடியிருந்த முகிற்கூட்டம் கலைந்து சிறிது சிறிதாய் வானம் வெளுத்துக்கொண்டு வரவே, முன்போல் ஆகாயம் தெளிவுடன் விளங்கிற்று. தன்னுடைய பிரார்த்தனை அம்பிகைக்குக் கேட்டுவிட்டதென்று காமாட்சி நினைத்தாள்.

முருகேசன் படுக்கப் போகுமுன் அன்றைக்குப் பத்தாவது முறை கந்தையனுக்கும், கோவிந்தனுக்கும் காலையில் அறுவடையைப் பற்றி நினைப்பூட்டி விட்டு வந்து படுத்துக்கொண் டான். அவன் நித்திரைக்குப் போனபொழுது நேரமாகிவிட்டது. அவன் படுக்கையிலேயே புரண்டு படுத்துக்கொண்டிருந்தான். நித்திரை அவனுக்கு எப்படி வரும்? அவனுடைய மனம் விழிப்பிற்கும் தூக்கத்திற்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆயிரஞ் சிந்தனைகள் பிசாசுகளைப் போல் வந்து அவன் மனதிலே ஓடிக்கொண்டிருந்தன.

அவன் வயலிலே நெல் அறுத்துக் கொண்டிருக்கிறான். பக்கத்திலே கோவிந்தனும், கந்தையனும் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அறுத்து வைத்ததை காமாட்சியும், பொன்னியும், சின்னம்மாவும் கட்டுக் கட்டாய் அடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். கிளிகளையும் காக்கைகளையும் துரத்திக் கொண்டு திரிகிறான் ராமு. அப்பொழுது காமாட்சி; "பள்ளத்து பள்ளன் எங்கேடி போய் விட்டான்" என்று பள்ளு பாடத்தொடங்கினாள்.

அதற்குப் பொன்னி "பள்ளன் பள்ளம் பார்த்துப் பயிர் செய்யப் போயிட்டான்" என்று சொல்ல, காமு, "கொத்துங்கொண்டு கொடுவாளுங்கொண்டு...." என்று இரண்டாம் அடியைத் தொடங்கினாள்.

அதற்குப் பொன்னி "கோழி கூவலும் மண்வெட்டிகொண்டு" என்று சொல்ல, இருவரும் சேர்த்து "பள்ளன் பள்ளம் பார்த்துப் பயிர் செய்யப் போயிட்டான்!" என்று முடித்தனர்.

உடனே காமு, "ஆளுங் கூழை அரிவாளுங் கூழை" என்று சொன்னதும் முருகேசன் "யாரடி கூழை" என்று அரைத் தூக்கத்திலிருந்து கத்திக்கொண்டு எழுந்திருந்தான்.

முருகேசன் - ஆள் கூழை. பாவம் தன்னையே அவள் கேலி செய்வதாக நினைத்து அப்படிக் கோபித்துக்கொண்டான். இப்பொழுது நித்திரை வெறி முறிந்ததும் தான் செய்ததை நினைக்க அவனுக்கு வெட்கமாய் இருந்தது. தனக்குள்ளே சிரித்துக்கொண்டு திரும்பவும் படுத்துக் கொண்டான். அந்தக் கனவுதான் எவ்வளவு அழகான கனவு! அதன் மீதியையும் காண வேண்டுமென்று ஆவலாயிருந்தது. ஆனால், நித்திரை எப்படி வரப்போகிறது? கனவுதான் மீண்டும் காணப்போகிறானா? தன் கற்பனையிலே மீதியைச் சிருஷ்டித்துப் பார்த்து அவன் மகிழ்ந்து கொண்டிருந்தான்.

பாட்டுடன் அறுவடை சென்றுகொண்டிருக்கிறது. வயலிலே நின்று நெல் மூட்டைகளை வண்டியிலே ஏத்துகிறான். வண்டி வீட்டு வாசலிலே வந்து நிற்கிறது. அவனுடைய களஞ்சியம் நிறைந்து பரிபூரணமாய் விட்டது. ராமன் வயிறு நிறையப் பாற்கஞ்சி குடித்துக் கொண்டிருக்கிறான். காமு ஒட்டியாணத்துடன் வந்து அவனை...

அப்பொழுது வீட்டுக் கூரைக்கு மேலிருந்த ஒரு சேவல் கூவிற்று. முருகேசனுடைய கற்பனை அறுந்துவிட்டது. அக்கிராமத்திலுள்ள சேவல்கள் தொடர்ந்து ஒவ்வொன்றாகக் கூவிக்கொண்டு வந்தன. அவன் வீட்டுக்கு முன்னால் கட்டியிருந்த ஆட்டுக்குட்டி "மேய் மேய்" என்று கத்தத் தொடங்கியது. எங்கிருந்தோ கள்ளத்தனமாய் உள்ளே நுழைந்த மெல்லிய காற்று அவன் மேல் படவே, மீண்டும் குளிர்ந்தது. முருகேசன் பரபரவென்று எழுந்திருந்தான். வாசலை அடைந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

அவன் படுக்கைக்குப் போனபொழுது வானத்திலே பூத்திருந்த நட்சத்திரங்கள் ஒன்றையும் காணவில்லை. வானம் கறுத்துக் கனத்து எதிலோ தொங்கிக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. வீட்டு முற்றத்திலே வந்து நின்றான். ஒரு மழைத்துளி அவன் தலைமேல் விழுந்தது. கையை நீட்டினான். இன்னுமொரு துளி! மற்றக் கையையும் நீட்டினான் இருதுளிகள் வீழ்ந்தன. அவன் தலையிலேவானமே இடிந்து விழும் போல் இருந்தது.

உக்கிப்போய்த் தன் வீட்டுத் திண்ணையிலே அவன் குந்திக் கொண் டான். பொலு பொலுவென்று மழை தொடங்கியது. இடி இடித்தது. மின்னிமழை சோனாவாரியாகக் கொட்டிக் கொண்டிருந்தது.

காலை ஏழுமணியாகியும் மழை விட வேயில்லை. ராமு ஓடி வந்து தந்தைக்குப் பக்கத்திலே குளிர் காய்ந்துகொண்டிருந்தான். காமாட்சி இடிந்துபோய் நின்றாள். மழையுடன் காற்றும் கலந்து "ஹோ" என்று இரைந்து கொண்டிருந்தது.

"அம்மா, இன்னைக்குப் பாற்கஞ்சிதாறதாய்ச் சொன்னியே, பொய்யாம்மா சொன்னாய்? என்று தாயைப் பார்த்துக் கேட்டான் ராமு.

காமாட்சிக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவள் வயிறு பற்றி எரிந்தது. பச்சைக் குழந்தையை எத்தனை நாள்களாய் ஏமாற்றி விட்டாள்? மழையையும் பாராமல் பக்கத்து வீட்டிற்கு ஓடினாள் காற்படி அரிசி கடனாய் வாங்கிக்கொண்டு வந்தாள்.

முருகேசன் ஒன்றும் பேசாமல் வானத்தைப் பார்த்தபடி இருந்தான். அவனுடைய பார்வை வயல்வெளியே ஊடுருவிச் சென்று எங்கேயோ லயித்துப்போய் இருந்தது.

'வெள்ள வாய்க்காலிலே தண்ணீர் கரைபுரண்டோடிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது குளம் நிறைந்து தண்ணீர் பெருக்கெடுத்துவிடும். என்னுடைய நெற்பயிர்கள் கீழே விழுந்து உருக்குலைந்து விட்டன. நெற்கதிர்கள் உதிர்ந்து வெள்ளத்துடன் அள்ளுண்டு போய்க்கொண்டிருக்கின்றன' என்று அவன் எண்ணி ஏங்கினான்.

காமாட்சி களஞ்சிய அறைக்குப் போனாள். அது வெறுமனே கிடந்தது. அதைப் பார்த்ததும் அவளுக்கு அழுகை விம்மிக் கொண்டு வந்தது. அங்கே நிற்கத் தாங்காமல் வெளியே வந்தாள். ராமு, "நாளைக்கும் தாரியாம்மா பாற்கஞ்சி" என்று கெஞ்சிக் கேட்டான். அவன் கஞ்சி குடித்த கோப்பை அவளுக்கு முன்னே காலியாகக் கிடந்தது.

அநேகநாள் பழக்கத்தினாலே "நாள்ளக்..." என்று மட்டுமே அவளால் சொல்ல முடிந்தது. அந்த அரைகுறையான வார்த்தை முருகேசன் வயிற்றிலே நெருப்பை அள்ளிக் கொட்டியது. ★

# உங்கள் இராசிக்கு இந்த வாரத்துப் பலன்

(29.07.2007-04.08.2007 வரையுள்ள)

சோதிடர் சண்

## மேடம்

உங்களுக்கு இந்தவாரம் சனி பகவான் கடக ராசியில் அஸ்தமனம் ஆவதால் இதுவரை இருந்த தொழில் சம்பந்தமான இடையூறுகள் நீங்கும். இதனால் தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களுக்கு தொழில்நிலைச் சிறப்பு ஏற்படும். மற்றும் வாகனம், ஆதனம், உடைமை, சொத்து சம்பந்தமாக இருந்த இடையூறுகள் நீங்கும்

குடும்பஸ்தர்களுக்கு பொன், பொருள் நன்மையும் மாணவர்களுக்கு கல்விச் சிறப்பும் வியாபாரிகள், வர்த்தகர்களுக்கு லாபம், சுகம் என்பன தரும் வாரமாகும். செவ்வாய், சந்திரன் சேர்க்கை குடும்பஸ்தர், காதலர்களுக்கு இனிமை தரும் வாரமாகும்.

## இடபம்

உங்களுக்கு இதுவரை இருந்த சகோதர பகை மற்றும் ஆள்களால் ஏற்பட்ட துன்பம் நீங்கும். 7இல் குரு இருந்து சந்திரனை நோக்குவது குரு, சந்திர யோகமான பலனைக் குடும்பத்தில் தருவதுடன் பணம், பொருள், செல்வாக்கைத் தர இடமுண்டு. மாமன் வழி உதவிகளும் நன்மைகளும் கிட்டும். மாணவர்களுக்கு கணிதத்துறையுடன் கூடிய கல்விக்கு நற்பலன் கிட்டும். திருமண வயதுடையவர்களுக்கு திருமணப் பேச்சு நன்மை தரும்.

## மிதுனம்

உங்களுக்கு இந்தவாரம் ஏழரைச் சனி பகவானுடைய கடைக்கூறு கழிந்து குடும்ப ஸ்தானத்திலிருந்து கறுப்புத் திரைநீங்கி வருங்காலத்தில் குடும்ப சுகத்தை ஆரம்பிக்கும் வாரமாகும். இதனால் இதுவரை இருந்த குடும்ப இன்னல்கள் நீங்கும். பணம், பொருள் மட்டமான பலன் தரும். கடல் பிரயாணத் தடை நீங்கும். பிரயாண சுகமுண்டு. தொழிலாளர்கள் உத்தியோகஸ்தர்களுக்கு தொழிலால் சம பலனும் மாணவர்களுக்கு கல்வியால் நற்பலனும் உண்டு.

## கடகம்

உங்களுக்கு இதுவரை இருந்த ஏழரைச் சனி பகவானுடைய நடுக் கூறுக்காலம் நீங்கி சந்திரன் பிரகாசிக்கும் நிலை தொடங்கிய வாரமாகும். இதனால் இதுவரை இருந்த உபாதை தரும் வருத்தங்கள் நீங்கும். துன்பம் நீங்கி குடும்ப உறவுகள் மேம்படும். பிரிந்தவர் கூடினால் சொல்லவும் வேண்டுமா என்ற பலனுக்கு குடும்ப சுகம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலாளர்களுக்கு தொழிலால் லாபம், சுகம் ஏற்படும். வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்குத் தடைகள் நீங்கி பிரயாண சுகம் ஏற்படும். 5இல் குரு இருப்பது மாணவர்களுக்கு கல்வி நிலை நற்பலன் தரும். வெளியூர் பண உதவிகள் வந்துசேரும். அம்பிகை வழிபாடு அல்லல் தீரும்.

## சிங்கம்

உங்களுக்கு இந்தவாரம் சனி பகவானுடைய இடப்பெயர்ச்சியினால் 12ஆம் இடத்து சனிபகவான் அஸ்தமனம் ஆவதால் தலைக்கு வேதனை தரும் சம்பவங்கள் குறைந்தாலும், வியாழ சுகமில்லாத காரணத்தால் இந்தவாரம் நற்பலன் தரக்கூடிய காலமல்ல. தொழில் செய்வோருக்கு தொழில் நிலை மற்றும் வருமானம் மற்றும் வரவிற்கு அதிகமான செலவினம் ஏற்படும். கடன்கொடுத்தாலும் கடன் வாங்கினாலும் வேண்டப்படாத பிரச்சினைகளால் பகைமையை ஏற்படுத்திக்கொள்ள உடல்நிலையில் சிலருக்கு இரத்தம் கெடக்கூடிய இரத்தக்கொதிப்பு, சலரோகம் போன்ற நோய்களால் அல்லற்படவும் பலன் உண்டு. சூரிய வணக்கம் சுமூக நிலையைத் தரும்

## கன்னி

உங்களுக்கு ஞானகாரகன் கேது பகவான் 12இல் இருப்பது இறைவணக்கத்துடன் கூடிய ஞானப்போக்கும் ஜீவகாருண்ணியமான தருமம் செய்யும் செயலைச் செய்யத் தூண்டும் வாரமாகும். சந்திரனை சனி பார்வை விட்டு விலகுவதால் நோய் நொடி நீங்கி சுகதேகியான பலனைப் பெறவும் சகோதர பகை நீங்கி குடும்பத்தில் சந்தோஷம் நிலவும். தொழில்நிலை நன்மை தரும். உத்தியோகஸ்தர்களுக்கு தொழில்நிலைச் சிறப்புண்டு. குடும்பஸ்தர்களுக்கு சம பலன் உண்டு. மாணவர்களுக்கு கல்விநிலையில் சில முட்டுக்கட்டைகள் தோன்றி மறையும். பண வருவாய் சம பலன் தரும். விஷ்ணு வணக்கம் வினைகள் தீர்க்கும்.

## துலாம்

உங்களுக்கு இந்த வாரம் பணம் தரும் வாரமாகும். குடும்பஸ்தர்களுக்கு குரு ஆசி வழங்குவது குடும்பச் சிறப்பும் வாக்கு வல்லமை மற்றும் சொல்லுக்கு மதிப்புப் பெறும் வாரமாகும். கடல் கடந்த நாட்டுத் தொழில் பெறுவோர் மற்றும் கடலில் தொழில் செய்வோர் அதிக லாபமடைவர். குடும்பஸ்தர்களுக்கு குதூகலமான மகிழ்ச்சி தரும் நற்பலன் கிட்டும். புத்திரரால் பெரிதாக நற்பலன் பெற வாய்ப்பில்லை. மாமன் வழிச் சுகமும் சிலருக்குக் கிடைக்காது. சந்திரனும் செவ்வாயும் ஒன்றையொன்று நோக்குவது காதலர்களுக்கு களிப்பூட்டும் வாரமாகும்.

## விருச்சிகம்

உங்களுக்கு இந்த வாரம் ஜென்மத்து வியாழனும் 9இல் சனி, சூரியன் நின்றாலும் சனி அஸ்தமனம் அடைவதால் பொருளாதார நெருக்கடியிலிருந்து விடுபடுவீர்கள். ஆதனம், வீடு, வாகனம் சம்பந்தமாக இதுவரை இருந்த பிணக்குகள் தீரும். புத்திரரால் சுகமுண்டு. மாமன் வழியாலும் உதவிகள் உண்டு. தொழில்நிலை மந்தமான பலன் தரும். வெளியூர் செய்திகள் நற்பலனைத் தரும். மாணவர்களுக்குக் கல்வியால் நற்பலனும் குடும்பஸ்தர்களுக்கு ஓரளவு நற்பலனும் தரக்கூடிய வாரமாகும். கந்தனை வணங்கி கருணை பெறுவீர்.

## தனுசு

உங்களுக்கு இந்த வாரம் ராசி அதிபதி குரு 12இல் இருப்பது பண விரயம், செலவு, நட்டமடைதல் என்பன உண்டு. ஆனாலும் அட்டமத்துச் சனிபகவான் அஸ்தமனமடைவதால் சனி பகவானால் இதுவரை இருந்த துன்பநிலை கழியும் வாரமாகும். எனவே இந்தவாரம் குடும்பரீதியாகக் குறை நீங்கிய வாரமாக இருப்பதுடன் பதற்றம், பயம், விபத்து என்பன நீங்கிய நிலை ஏற்படும்.

குடும்பஸ்தர்களுக்கு புத்திரரால் சுகமுண்டு. சிலருக்கு புத்திரர் கடல் கடந்த நாடு போன்ற இடங்களுக்குப் பிரயாணம் செய்யவும். தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களுக்கு தொழிலால் நற்பலனும் உண்டு. தட்சணாமூர்த்தியை வணங்கி தனம், தானியம் என்ற செல்வத்தை பெற்றிடுவீர்.

## மகரம்

உங்களுக்கு இந்த வாரம் சந்திரனுக்கு 7ஆம் வீட்டில் பகையாக இருந்த சனி பகவான் குடும்பத் துயரத்திலிருந்து விலகும் வாரமாகும். இது இந்த ராசிகளுக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்த குறைபாடு நீங்கி களத்திர சுகம் தரும். கணவன், மனைவி உறவுகள் மேம்படும். சகோதர வழி நன்மையுண்டு. பணவரவு நன்மை தரும். புத்திரரால் சமபலன் பெறுவர். மாமன் வழி உதவிகளும் அன்னியர் உதவியும் நற்பலன் தரும். திருமண உத்தியோகஸ்தர், தொழிலாளர்களுக்கு மிக நல்ல பலனும் வியாபரிகளுக்கு ஆதாயமும் பணவரவும் ஏற்படும். சனீஸ்வரனை வணங்கி சங்கடங்களை நீக்குங்கள்.

## கும்பம்

உங்களுக்கு சத்துரு ஸ்தானத்திலிருந்த சனி பகவான் விலகும் வாரமாக இருப்பதால் இந்த வாரம் சத்துரு பகை, ரோகம், வழக்கு வம்புகள் ஆகியன நீங்கி புதிய நிலைக்குத் தள்ளப்படுகிறீர்கள். எனவே பயம், பதட்டம் நீங்கும். பகைமை நீங்கி நட்பு ஏற்படும். நியாயத்தை உடைய அதிகாரிகளின் தீர்ப்பினால் நன்மையுண்டு. சிலருக்கு இடமாற்றமும் அலைச்சலும் தரும். குடும்பஸ்தர்கள் இதுவரை இருந்த கஷ்டங்களிலிருந்து விடுபடுவர். ஆதாயம் தரும் பலன் கிட்டும். புத்திரரால் சுகமுண்டு. பெரியோர் ஆசியுண்டு. உத்தியோகத்தர்களுக்கு சம பலன் உண்டு. சனி பகவானின் நன்மை கிடைக்கும்.

## மீனம்

உங்களுக்கு 5ஆம் இடமான இருதய ஸ்தானத்தில் நின்ற சனிபகவான் அஸ்தமனம் அடைவதால் இந்தவாரம் மனநிறைவு பெற்று வயிறு, இருதயம், சலாசயம் போன்ற நோய்களிலிருந்து விடுபடுவீர்கள். குடும்பத்தில் புத்திரரால் சுகமடைகிறீர்கள். பணம், பொருள் நற்பலன் தரும். தொழிலாளர்களுக்கு தொழில் சிறப்பு வருமானமுண்டு. வாகனம், பூமி, வீடு, கால்நடை இப்படியானவை சேரக்கூடிய பலனும் உண்டு.

மாணவர்களுக்கு அறிவை ஆரம்பிக்கும் வாரமாக இருப்பதுடன் உத்தியோகஸ்தர்கள் பதவியால் நற்பலன் பெறுவர். இதுவரை இருந்த கடல் பிரயாண தடை நீங்கி பிரயாண சுகமுண்டு. மாமன் வழி உதவிகள் நன்மை தரா. தட்சணாமூர்த்தியை வணங்கி வாரத்து நன்மைகளைப் பெறுவீர்காளாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

# VACANCIES

Applications will be received by me up to 27th August, 2007 from suitably qualified candidates for the following posts.

**1. UNIVERSITY MEDICAL OFFICER {UMOI (II)}**

Qualifications:

Medical Degree of a recognized University with at least 03 years experience as Medical Practitioner.

Salary Scale: Rs.27,485 - 10 x 585: 10 x735 - 40,685/-p.m

Selection: By Interview

**2. DIRECTOR OF PHYSICAL EDUCATION [U-EX2 (III)]**

Qualifications:

i. (a) A degree in Physical Education of a recognized University or equivalent or higher qualifications with at least 12 years' experience in the organization and implementation of recreational programmes after obtaining such degree/qualification

OR

(b) A graduate of a recognized University with approved postgraduate or professional qualification with at least 12 years experience in the organization and implementation of recreational programmes after obtaining such degree/qualification.

OR

(c) Instructors of Physical Education in the University service with not less than twelve (12) years' service in that grade and who have satisfactorily completed a course in Physical Education of not less than 06 months' duration after being appointed as Instructor. (A person considered under this category could be appointed on the recommendation of the Council and with prior approval of the Commission)

Notes: An applicant who is eligible under (i) (b) above will be considered only if there are no suitable applicants under (i) (a). An applicant who is eligible under (i) (c) above will be considered only if there are no suitable applicants under (i) (a) and (i) (b)

Salary Scale: Rs.32.750 - 12x585 - 39, 770/-p.m.

Selection: By Interview

**3. ASSISTANT REGISTRAR (LEGAL & DOCUMENTATION) {U-EX1(IV)}**

Qualifications:

L.L.B Degree of a recognized University/Attorney-at-Law with not less than 03 years experience in Court work, Legal Work relating to Corporations/companies and in drafting legal documents.

Salary Scale: Rs.25.145 - 3.585 - 26,900 (EB)
28,555 - 29x585 - 45, 620/- p.m

Selection: By Structured Interview

**4. PURCHASING OFFICER - U-MN 3 (III)**

Qualifications:

i. G.C.E.(O/L) Examination in six (06) subjects at not more than two sittings with credit passes in three (03) subjects. The Credit passes must include Sinhala / Tamil / English Language and Arithmetic / Commercial Arithmetic / Mathematics.

ii. Should have at least 15 years experience in Store-Keeping and Maintenance of records in a Government Department, Public Corporation or a recognised Institute. Out of 15 years experience at least 5 years' experience should be in purchasing and identifying engineering tools, electrical and hardware items.

Salary Scale: Rs.21.475 - 10x290: 1x420 - 24,795/- p.m.

Selection: By Test and Interview

**AGE LIMIT FOR ALL POSTS: Not more than 45 years**

Note: Age limit is not applicable to those who are in service

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar / Establishments (Non - Academic) of this University on payment of Rs.100/- for each application form of the People's Bank, University of Jaffna Branch or at the Shroff's Counter of this University. Those who wish to obtain the forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self-addressed Rs.5.00 stamped envelope of 23x10 c.m., in size.

The envelope containing duly filled application form must bear the name of the post to which they apply on its top left hand corner and either hand delivered or sent under registered post to reach the office of the Registrar on or before 27th August 2007.

Applications sent on the specified form only will be accepted. Applications received after the closing date will be rejected without intimation.

**STATUTORY BENEFITS**

1. Allowances approved by the University Grants commission
2. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University System
3. Gratuity payment
4. Employment Trust Fund benefits.
5. Free medical care

Those who are in Public Service / Corporations / Statutory Bodies should forward their application through their respective Heads of Departments / Corporations / Boards. Advance copies of applications may be sent in the first instance. However no such applicant will be considered for appointment if the application routed through the Head of Department is not received.

**Registrar**

26.07.2007 (C/53048)

## கார் விற்பனைக்கு

மிக நல்ல நிலையிலுள்ள தொடர் இலக்கம் UP - JG உடைய A/C கார் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 - 9760579 (62900)

## காது கேட்கும் கருவி உடனே தேவை NEARINA AID

காது கேட்கும் கருவி வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். T.P. 222 3375
36, பாரதி வீதி, யாழ்ப்பாணம். (62973)

## HOUSE FOR RENT

Three Roomed house with all facilities including telecom telephone is available for rent at Nayanmar Road, Nallur. Close to Muththirai Santhai.
Telephone No. 222 9263 (62980)

## இறைச்சிக்கோழி

உயிர்க்கோழி, புறொயிலர், கல்பேட், விறாத்துச் சேவல் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. (சுத்தம் செய்தல் இல்லை).
1. NEW R.S.K. FARM, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. சோபிதா எலெக்ரோனிக்ஸ், K.K.S. றோட், சுன்னாகம்.

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

ஐஸ் பிறிமா, உயிருடன் புறொயிலர், கல்பேட்ஸ், ஊர்ச்சேவல், விறாத்துக் குஞ்சுகள் என்பன சுத்தம் செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம்.
தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்,
61, இராமநாதன்வீதி,கலட்டி, யாழ்ப்பாணம்.
கிளை: மல்ரி பாம், சுவாமியார் வீதி, பாசையூர் அந்தோனியார் கோயில் முன்பாகவும் பெற்றுக் கொள்ளலாம். (62988)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (62897)

## புறொயிலர் விற்பனைக்கு

புறொயிலர் கோழிகள் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் ஆகப் பிந்திய விலைகளில் தினமும் பெற்றுக் கொள்ளலாம். குமரன் பாம், 227, (நரியன்குண்டு) பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (62889)

## வீடு விற்பனைக்கு

அமைதியான, பாதுகாப்பான சூழலில் உள்ள நவீன தொடர்மாடியில் 3 B/ Rooms, 2 B/Rooms வீடுகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: Mr. C.CLINTON,
32, PRAZER AVENUE, DEHIWALA.
T.P: 0785436480, 0786168169, 0713321561. (A/52774)

## வீடு விற்பனைக்கு

3 ஆம் கட்டை, கலைமணி வீதியில் (கட்டைப்பிராய்) 2¼ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 222 5079 (62924)
(காலை 8 மணிக்கு முன் அல்லது பி.ப.3 மணிக்குப்பின்)

## குத்தகைக்கு விடப்படும்

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் 6 பரப்பு காணி குத்தகைக்கு விடப்படும். (வாகனங்கள் விடக்கூடியது) தொண்டு நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
217,77, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P. 077 9178547 (62971)

## Bangalore University

இந்தியாவில் உள்ள பெங்களூர் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு மாணவர்கள் கற்கும் ICSI Campus பிருந்தாவன் கல்லூரி மற்றும் கர்நாடக தேசிய கல்லூரிகளில் மிக குறைந்த செலவில் B.Sc., BCA, BBM ஆகிய பட்டப் படிப்புகளை நீங்கள் கற்க அரிய வாய்ப்பு
தகைமை A/L Pass (No age limit)
(2007 A/L பரீட்சை எழுதும் மாணவர்களும் தொடர்பு கொள்ளலாம்)
இப்பல்கலைக்கழகத்தில் கற்ற நாமே உங்களுக்கு அனுமதி பெற்றுத் தருகின்றோம்.
077 9905694 (Tharani & Sureshkumar)
21, பொன்னாலை வீதி, சண்டிலிப்பாய். (62953)

## கண்ணீர் அஞ்சலி

பொது நூலகத்தின் ஆயுள்கால உறுப்பினரான
**சிவநாதன் ராஜ்குமார்**
அவர்களின் பாசமிகு தந்தை
**அமரர் K.V.இராசையா சிவநாதன்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல பரராஜசேகரனைப் பிரார்த்திக்கின்றோம்.

இணுவில் பொது நூலகமும் சனசமூக நிலையமும், திருநெறிய தமிழ்மறைக் கழகம், விநாயக அடியார்கள். (62987)

# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு கமலாம்பிகை

பருத்தித்துறை, தும்பளையைப் பிறப்பிடமாகவும் 241, 2/4 W.A. சில்வா மாவத்தை, கொழும்பு - 6 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு கமலாம்பிகை (22.07.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வடிவேலு - அழகம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற சிவகுருவின் அன்பு மனைவியும் நவரட்ணம், சரஸ்வதி, அமரர் யோகாம்பிகை, சந்திரகாந்தி, பாலகிருஷ்ணன், ராதாகிருஷ்ணன் ஆகியோரின் சகோதரியும் சத்தியபாமா (கொழும்பு), சந்திரசேகரம் (கனடா), தங்கவடிவேலு (தும்பளை), சுபத்திரா (ஜேர்மனி), சித்திரா (திருகோணமலை), சிவபாதசுந்தரம் (கனடா), சத்தியசீலன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயும் குவேந்திரராஜா, யசோதரா, பிறேமாதேவி, லோகநாதன், பாலசுப்பிரமணியம், ஜெயசக்தி, சுசி ஆகியோரின் மாமியாரும் சத்தியா, சிவகுபேரன், மதுரா, கஜன் (பிரான்ஸ்), சுஜன், சிவக்கண்ணன், சிவராதை, லாவன்ஜா (யாழ். மருத்துவபீட 3 ஆம் வருட மாணவி) பிரகாஷ், சத்தியா, லவன், சுயானா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.07.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பு ஜெயரட்ண மலர்ச்சாலையில் காலை 7மணியளவில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைக்காக பி.ப 2 மணிக்கு பொரளை கனத்தை மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை,
பருத்தித்துறை. (62974)

தகவல்:
சி.தங்கவடிவேலு
(உரிமையாளர், சிற்றி வெதுப்பகம் )

## சிவபாதசுந்தரம் சிவதாசன் (நணங்காவர்)



இணுவிலைப் பிறப்பிடமாகவும் கொழும்பு நாரஹென்பிட்டி அண்டர்சன் தொடர்மாடி C /2/7 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிவபாதசுந்தரம் சிவதாசன் சென்னையில் (24/07/2007) இல் அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவபாதசுந்தரம் - சிவஞான வல்லியின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற முத்துக்குமாரு சிவபாக்கியம் தம்பதியினரின் அருமை மருமகனும் ரதிகுமாரியின் அன்புக் கணவரும், அனோஜா (ஆஸ்திரேலியா), நிரஞ்சா(Kreson MNS&Co), சௌமியா(பழைய மாணவி, கொழும்பு இராமநாதன் இந்துக்கல்லூரி ) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரஞ்சித்தின் (ஆஸ்திரேலியா) அருமை மாமனும் சிவனேசன், சிவராணி, காலஞ்சென்ற சிவயோகி மற்றும் சிவமதி (U.K), சிவமலர்(U.K.), சிவசக்தி ஆகியோரின் அருமைச் சகோதரரும் சிவகுமாரன் (பகவான் மருந்தகம்), காலஞ்சென்ற சிறிகுமார் மற்றும் தர்மகுமாரி(Canada), யசோக்குமார் (U.K), செல்வக்குமாரி(U.S.A.), விஜியகுமார்(U.K.), புஸ்பகுமாரி(U.K.) ஆகியோரின் அன்பு மச்சானும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29.07.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப 11மணியளவில் கனத்தை பொதுமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அண்டர்சன் தொடர்மாடி,C/2/7, பார்க் றோட்,
நாரஹென்பிட்டி, கொழும்பு-05.
T.P. 0112590951 (62986)

தகவல்
மனைவி (ரதிகுமாரி),
பிள்ளைகள், மருமக்கள்.



## பசுபதிப்பிள்ளை தம்பிராஜா

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு குணசிங்கபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பசுபதிப்பிள்ளை தம்பிராஜா அவர்கள் (25.07.2007) புதன்கிழமை அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பசுபதிப்பிள்ளை- சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் லட்சுமியின் அன்புக் கணவரும் மகேந்திரன் (ஜேர்மனி), தங்க ராணி(வட்டக்கச்சி), ராஜேந்திரம் (வவுனியா), செல்வராணி (கொழும்பு), நேசராணி (பிரான்ஸ்), சிவராசா (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்லத்துரை (முன்னாள் முகாமையாளர்,வேலணை ப.நோ.கூ.சங்க ), கனகலிங்கம், சிவகுமார், பத்மாவதி, விஜியலெட்சுமி, கலைச்செல்வி அகியோரின் பாசமிகு மாமனாரும் அமரர்களான விசுவலிங்கம், இராசம்மா, பொன்னம்பலம், அன்னம்மா, நல்லபிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரரும் அமரர்களான வேலாயுதபிள்ளை, சின்னத்துரை, ஆறுமுகம், சோமசுந்தரம் மற்றும் கனகம்மா, தையலம்மை, சிவகாமிப்பிள்ளை, பூரணம், சரஸ்வதி, கதிரவேலு ஆகியோரின் மைத்துனரும் குகதாஸ், சுகிர்தா, ஜெயதாஸ், சுயாதா, தனுஜா, சர்மிளா, திவாகரன், சியாமளா, மேகலா, பவித்திரா, துசியா, பிரதீபா, பிரதாப், குஷாந்தினி, கஜந்தன், சுனித்திரா, மயூரா, மயூரன், மதுரன், ஜதுசன், தூரிகா, கவிசன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக ஜெயரட்ன மலர்ச் சாலையில் வைக்கப்பட்டு இன்று (29.07.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி அளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

டயஸ்பிளேஸ்,குணசிங்கபுரம்,
கொழும்பு - 12.
T.P. 0112321624 (62971)

தகவல்
குடும்பத்தினர்.

## திருமதி பற்றீசியா தனேஸ்வரி அந்தோனிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியை, நல்லாயன் கன்னியர் மடம், கண்டி. புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.)

யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத் தெரு வைப் பிறப்பிடமாகவும் நியூஸிலாந்தில் தற்போது வசித்து வந்தவருமான திருமதி பற்றீசியா தனேஸ்வரி அந்தோனிப்பிள்ளை (26.07.2007) வியாழக்கிழமை நியூஸிலாந்தில் காலமானார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சுதேஷனாவின் அருமைத் தாயும் ஞானேந்திராவின் அன்பு மாமியும் அக்ஷரா, நிகேரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற திரு. திருமதி துரைசிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்கள், புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்.) ஆகியோரின் மகளும் தனராஜன், தனபாக்கியம், தனசீலி, தனவதனி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-07-2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் St.Mary's Church Mount Albert, Auckland, Newzealand இல் நடைபெறும்.

தகவல்:
G.B.ஞானராஜ்
(கொழும்பு).

T.P.: 0064 98455595 (62970)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் மனம் வைத்தால் மட்டுமே சுற்றாடலை மாசுறாமல் காக்கலாம்

கடந்த ஜூன் மாதம் ஐந்தாம் திகதி உலக சுற்றாடல் தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் சுற்றாடல் தினம் ஆண்டு தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது. யாழ். பல்கலைக்கழகத்திலும் சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

சுற்றுச்சூழலை எதற்காகப் பாதுகாக்கவேண்டும்? பூமி வெகு வேகமாக மாசடைந்து வருகிறது. பூமி ஏன்மாசடைந்து வருகிறது? நவீன விஞ்ஞானக் கண்டு பிடிப்புகளும் இயற்கையை மனிதன் அழிப்பதுமே சூழல் மாசடைவதற்குக் காரணம். மனிதன் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்த போது சூழல் மாசடையவில்லை. சுற்றாடலைப் பாதுகாப்பதற்குரிய வழிகள் என்ன? இயலுமானவரை நவீன விஞ்ஞான வாழ்க்கை முறையிலிருந்து விடுபடுவதுடன் எம்முதாதையரின் வழியை (வாழ்க்கை முறையை) பின்பற்றுவதன் மூலம் சுற்றாடல் மாசடைவதை ஓரளவுக்கேனும் கட்டுப்படுத்தலாம்.

எமது சக்திக்கு அப்பாற்பட்ட விடயங்களில் எம்மால் எதுவுமே செய்ய முடியாது. உதாரணமாக அணுகுண்டுப் பரிசோதனை, அணு உலை வெடிப்பு மற்றும் சர்வதேச உள்நாட்டு யுத்தங்கள் காரணமாக இயற்கையில் ஏற்படும் மாற்றங்களால் சூழல் மாசடைவதை எம்மால் தடுக்க முடியாது. எனினும் எமது அன்றாட வாழ்வில் சூழலை மாசுபடுத்தும் நடவடிக் கைகளை நாம் மேற்கொள்ளாமல் விட்டால் அதுவே நாம் வருங்கால சந்ததியினருக்கு வழங்கும் மிகப்பெரிய கொடை.

**சூழலை மாசுபடுத்தும் பொருள்கள்**

சூழலை மாசுபடுத்தும் விடயங்களில் முதலிடம் வகிப்பன பொலித்தீன், பிளாஸ்ரிக், கிருமி நாசிகள், நச்சுப்புகை மற்றும் தொழிற் சாலைக் கழிவுகள் என்பன இன்றைய உலக மயமாக்கப்பட்ட வாழ்க்கையில் மேலே கூறப்பட்டவை யாவும் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்டன.

மேலே கூறப்பட்ட பொருள்களை எமது அன்றாடப் பாவனையில் இய லுமான வரை தவிர்த்துக் கொள்வதன் மூலம் நாம் வாழும் சுற்றாடலை குறைந்தது எமது வீட்டையும் சுற்றுப் புறத்தையுமாவது தூய்மையாக வைத்துக் கொள்வதுடன் இயற்கைக் காற்றையும் சுவாசிக்கலாம். இன்று உலகிற்குப் பாரிய அச்சுறுத்தலாக விளங்குவன பிளாஸ்ரிக்கும் பொலித்தீனுமே. மேலை நாடுகள் இவற்றை மீள் உற்பத்தியிலீடுபடுத்தத் தொடங்கி விட்டன. (Recycling) தமது அன்றாட நாடான இந்தியாவில் சென்னையில் கூட பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தி தெருக்களை அமைக்கத் தொடங்கிவிட்டனர்.

**பிளாஸ்ரிக்கினால் வரும் கேடுகள்**

நமது நாட்டில் பிளாஸ்ரிக் அல்லது பொலித்தீன் கழிவுகள் இல்லாத இடமே இல்லை. இந்த பிளாஸ்ரிக் பொலித்தீன் கழிவுகளைப் புதைக்க முடியாது. காரணம் இவை முந்நூறு ஆண்டுகள் கழிந்தாலும் உருக்குலையாமல் அப்படியே இருக்கும். கடலுக்குள்ளும் கொட்டமுடியாது ஏனைய பொருள்களைப் போல் இவை நீரில் கரையவோ துருப்பிடிக்கவோ மாட்டா. குப்பையில் போட்டுக் கொளுத்தினாலும் இதிலுள்ள இராசயன நச்சுப் புகை ஓசோன் படலங்களைத் தாக்குவதால் சூழலில் பாரிய தாக்கம் ஏற்படுகிறது. நாம் இவை மூன்றையும் செய்து வருகிறோம். அரசாங்கத்திற்கு உண்மையிலேயே சுற்றாடலைப் பாதுகாக்க வேண்டும் என்ற அக்கறை இருந்தால் அரசாங்கம் செய்ய வேண்டியது இயலுமான வரை பிளாஸ்ரிக், பொலித்தீன் பாவனையைத் தடை செய்வதுடன் பிரதியீட்டுப் பொருள்களைப் பாவிக்குமாறு வலியுறுத்துவதுதான் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கான வழி.

இன்று எங்கும் எதிலும் பொலித்தீன், பிளாஸ்ரிக் இவற்றுக்கு பிரதியீட்டுப் பொருள்கள் இல்லையா! தாராளமாக உள்ளன. கொழும்பிலிருந்து

## பிரம்புக் கூடைகளும் புற்பைகளும் இன்று மறைந்து போய் விட்டன

அல்லது வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் பிளாஸ்ரிக்கிலும் பொலித்தீனிலும் பொதி செய்யப்பட்டு வரும் போது அதை எம்மால் தவிர்க்க இயலாது. ஆனால் எமது நாளாந்த வாழ்வில் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைக் குறைப்பதன் மூலம் அல்லது நிறுத்துவதன் மூலம் ஓரளவுக்கேனும் நாம் வாழும் சுற்றாடலையாவது பாதுகாக்கலாம்.

தினசரி வாழ்க்கையில் எமது பாட்டனும் பாட்டியும் பயன்படுத்திய பொருள்களை நாமும் பயன்படுத்துவதன் மூலம் ஓரளவுக்கேனும் இயற்கைக் காற்றை சுவாசிப்பதுடன் எமது பிள்ளைகளும் ஓரளவுக்காவது தூய்மையான காற்றை சுவாசிக்க வழிவகுக்கலாம். இதுவே எமது பிள்ளைகளுக்கு நாம் வழங்கும் விலைமதிப்பற்ற சொத்து

**புற்பைகளும் பிரம்புக் கூடைகளும்**

சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்னர் சாதாரணமாக பாவனையிலிருந்த புற்பைகள், பிரப்புக் கூடைகள் இன்று இல்லை. சொப்பிங் பாக்கில் அரைமணி நேரம் வாழைப்பழத்தை வைத்திருந்தால் வாழைப்பழம் கறுத்து விடும். சொப்பிங் பாக்கின் இரசாயன நச்சுத் தன்மையைப் பற்றிக் சொல்வதற்கு இதைவிட உதாரணம் தேவையில்லை.

தென்னோலையில் பின்னப்பட்ட பூக்குடலையில் ஆலயங்களுக்கு பூ எடுத்துச் செல்லப்பட்டது. இந்தக் குடலையினுள்ளிருக்கும் பூக்கள் காலை முதல் மாலை வரை வாடாமலிருக்கும் செப்பிங் பாக்கினுள்ளிருக்கும் பூக்கள் அரை அணி நேரத்தில் அதன் சோபையை இழந்துவிடும். பூமாலையும் இதேபோலத்தான்

வாழையிலையில் பொதி செய்யப்பட்ட உணவுகள் நீண்ட நேரத்திற்கு பழுதடையாமலிருக்கும். லஞ்சீற்றில் பொதி செய்யப்பட்ட உணவுகள் ஓரிரு மணித்தியாலங்களில் பழு தடைந்து விடும். இவை நாம் அனுபவத்தில் காணும் விடயங்கள். பனை ஓலையில் பின்னப் பட்ட பறியிலேயே மீன் எடுத்துச் செல்லப்பட் டது. வடலி ஓலையில் இறைச்சி எடுத்துச் செல்லப்பட்டது. பேக்கரிகளிலும் புடைவைக் கடைகளிலும் அழகிய பிறவுண் பைகளில் பொருள்கள் வழங்கப்பட்டன. கள், பதநீர் என்பன முட்டியில் சேகரிக்கப்பட்டு பிளாவில் வழங்கப்பட்டன. பிளாஸ்ரிக் போத்தலில் சேகரிக்கப்பட்டு பிளாஸ் ரிக் போத்தலில் வழங்கப்படவில்லை.

**மாசுபடுத்தும் உரவகைகள்**

பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பவற்றுக்கு அடுத்த படியாக இயற்கையை மாசுபடுத்துவன உரமும் கிருமிநாசினியும். உரம் மண்ணிலுள்ள பசளைகள் யாவற்றையும் உறிஞ்சி எடுத்துவிடும். சிறிது காலத்திற்கு முன்னர் கிராமப்புறங்களில் குப்பை வண்டிகளைக் காணலாம். மக்கள் குப்பை எரு போன்றவற்றை வளவுகளில் சேமித்து வைப்பார்கள். பயிர்ச் செய்கைக்காலம் ஆரம்பமாகியதும் குப்பை வண்டில்கள் வீடு வீடாகச் சென்று குப்பைகளைச் சேகரித்து விவசாயிகளுக்கு விநியோகிக்கும் கிராமப்புறங்களில் வீதிகளில் குப்பையையோ மாட்டுச் சாணியையோ காண்பது அரிது. காரணம் விவசாயிகளுக்கு பசளை. ஏனையவர்களுக்கு பணம்.

திராட்சை பயிரிடுபவர்கள் பசளையிடும் முறையை விளக்கினால் ஏனையோருக்கு கழிவுப் பொருள்களை நம்மவர்கள் எப்படி பசளையாக்கினார்கள் என்பது புரியும். திராட்சை பயிரிடுவோர் நிலத்தினடியில் கிடங்கு வெட்டி அதன் அடிப்பாகத்தில் விலங்குகளின் எலும்புகளைப் போட்டு சிலர் இறந்த விலங்குகளைப் புதைப்பதுமுண்டு. அதன் மேல் இரும்புக்கழிவுகளைப் போட்டு பின் அதன்மேல் குப்பையைப் போட்டு மேற்பரப்பில் எருவை இட்டு நிலத்தைப் பண்படுத்திய பின்னரே அந்நிலத்தில் திராட்சை பயிரிடுவர். இன்று குப்பையை பசளையாகப் பாவிக்க முடியாத நிலை காணப்படுகிறது. காரணம் குப்பையினுள் 90% சொப்பிங்பாக், பொலித்தீன், பிளாஸ்ரிக் கழிவுகள் என்பனவே காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் நிலத்தடி நீர் வெகுவேகமாக மாசடைந்து வருகின்றது. நிலத்தடிநீர் மாசடைவதற்கான பிரதான காரணிகளுள் உரப்பாவனையும் ஒன்று. அண்மையில் மட்டக்களப்பில் தோட்டத்தில் விசிறப்பட்ட கிருமிநாசினி காற்றில் கலந்ததால் அருகிலிருந்த பாடசாலை மாணவிகள் மயக்கமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட செய்தி பி.பி.சி உட்பட சகல ஊடகங்களிலும் வெளியானது. இந்திய விஞ்ஞானிகள் எமது பாரம்பரிய தொற்று நீக்கி அல்லது கிருமிநாசினியின் மகிமையை விஞ்ஞான பூர்வமாக நிரூபித்து விட்டனர்.

**பஞ்சகவ்விய கிருமி நாசினி**

பஞ்சகவ்விய எனப்படும் பசுவின் உடலிலிருந்து பெறப்படும் ஐந்து பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டும் கிருமிநாசினி இப்போது தமிழ்நாட்டுத் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. பஞ்சகவ்வியம் பால், தயிர், நெய், பசுமாடின் சிறுநீர், சாணி என்பனவற்றைக் கொண்டு தயாரிக்கப்படுவது. பஞ்சகவ்வியம் தயாரிக்காமல் இந்துக்கள் எந்த ஒரு காரியத்தையும் செய்வதில்லை. மங்கல, அமங்கல கிரியைகளின் போதும் ஆலயத்திலும் பஞ்சகவ்கியம் தயாரித்து சுற்றுப்புறத்திற்குத் தெளித்த பின்னரே எந்த ஒரு கிரியையையும் ஆரம்பிக்கவேண்டும் என இந்து மதம் வகுத்துள்ளது. பஞ்சகவ்வியத்தைப் பயன்படுத்துவதால் சூழலில் எந்தவித பாதிப்பும் ஏற்படமாட்டாது.

**காடழிப்பால் ஏற்படும் நாசம்**

அடுத்தது காடழிப்பால் நமதுநாட்டில் வருடாந்தம் மழைவீழ்ச்சியின் அளவு குறைந்து வருகிறது. இதற்கு முக்கிய காரணம் காடழிப்பு. இலங்கை சுதந்திரமடைந்த போது இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 47 வீதம் காடாக இருந்தது. இது இப்போது 27 வீதமாகக் குறைந்துவிட்டது.

அடுத்த முக்கிய பிரச்சினை ரயர் எரிப்பு. ரயர் எரிப்பு யாழ்ப்பாணத்தில் தாராளமாக நடைபெற்று வருகிறது. கார்த்திகை தீபத்திரு நாளன்று வீதியில் ரயர்களைக் கொளுத்தி திருநாளைக் கரிநாளாக்குவதுடன் சுற்று வட்டாரத்தில் வசிபவர்களுக்கு நோய்களையும் உண்டாக்குகின்றனர் சில இளைஞர்கள் ஐ.நா. நிறுவனத்தின் அனுசரணையுடன் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலக மொன்று யாழ்.பிரதான வீதியில் திறக்கப்பட்டது.

வீதி செப்பனிடுவதற்காக தார் உருக்குவதற்கு வீதியில் ரயரைப் போட்டுக் கொளுத்தி தாரை உருக்கி வீதியைச் செப்பனிடும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் சுற்றாடல் அதிகார சபைக்கு இல்லையா?

எமது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் தூய காற்றைச் சிறிதேனும் சுவாசிக்க வழிவகுத்தோமேயானால் அதுவே அவர்களுக்கு நாம் வழங்கும் மிகப் பெரிய கொடை. ★

**ந.பரமேஸ்வரன்**

---

# ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்ற ஈராக் – சவூதி இன்று பலப் பரீட்சை

கடந்த ஒரு மாதகாலமாக களைகட்டியிருந்த ஆசியக் கிண்ண உதைபந்தாட்டத் திருவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை இரவுடன் முடிவுக்கு வருகின்றது.

இலங்கை நேரப்படி இன்று இரவு 8 மணிக்கு



இறுதிப்போட்டி ஆரம்பமாகின்றது. இறுதிப் போட்டியில் அரபு நாடுகளான சவூதி அரேபியாவும் ஈராக்கும் மோதுகின்றன.

இந்த உதைபந்தாட்டத் தொடரில் மொத்தம் 16 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்றன.

கடந்த ஒரு மாத காலமாகப் போட்டிகள் மிகவும் விறுவிறுப்பாகவும் கலகலப்பாகவும் இடம்பெற்றன.

எல்லாப் போட்டிகளிலும் அரங்கு நிறைந்த ரசிகர்கள் காணப்பட்டனர். ஆசிய நாடுகளைப் பொறுத்தமட்டில் ஆசியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி மிகவும் முக்கியமானதாக உள்ளதால் எல்லா நாடுகளில் இருந்தும் பெருமளவு ரசிகர்கள் கலந்துகொண்டனர்.

**இறுதிப் போட்டிக்கு சவூதி**

இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, வியட்நாம் இணைந்து ஆசியக் கிண்ண உதைபந்தாட்டத்தொடரை நடத்தின. மொத்தம் 16 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் அரையிறுதிக்கு ஈராக், தென்கொரியா, சவூதி அரேபியா, ஜப்பான் அணிகள் தகுதிபெற்றன.

முதல் அரையிறுதிப் போட்டியில் ஈராக், 4-3 கணக்கில் தென் கொரியாவை வீழ்த்தி முதன் முறையாக இறுதிக்கு தகுதி பெற்றது. இதனை தொடர்ந்து கடந்த வியாழன் நடந்த இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், சவூதி அரேபியா, ஜப்பான் அணிகள் பலப்பரீட்சை மேற்கொண்டன.

விறுவிறுப்பாக நடந்த போட்டியின் 35 ஆவது நிமிடத்தில், சவூதி அரேபியாவின் அல்-கோஹ்டனி முதல் கோலை அடித்தார். இதற்கு அடுத்த இரண்டே நிமிடங்களில் ஜப்பானின் நகசவா பதிலடி கொடுக்க முதல் பாதியில் இரு அணிகளும் 1-1 என சமநிலை அடைந்தன.

இரண்டாவது பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்க கடுமையாகப் போராடின. 47 ஆவது நிமிடத்தில் சவூதி அரேபியாவின் மாஸ், 53 ஆவது நிமிடத்தில் ஜப்பானின் யூகி அபேவும் கோலடித்தனர். தொடர்ந்து 57 ஆவது நிமிடத்தில் மாஸ் மற்றொரு கோல் அடிக்க, சவூதி அரேபியா முன்னிலை பெற்றது. இதற்கு பதிலடி கொடுக்க ஜப்பான் எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தது. இறுதியில் சவூதிஅரேபியா 3-2 என்ற கணக்கில் ஜப்பானை வீழ்த்தி இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. இறுதியில் சவூதி அரேபியா, ஈராக்கை எதிர்கொள்கிறது.

**நுழைந்தது ஈராக்**

ஆசியக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் தென் கொரியாவை வீழ்த்தி ஈராக் முதன் முறையாக நுழைந்தது.

இதில் கடந்த புதன்கிழமை நடந்த முதல் அரையிறுதியில் 'பிபா' தரவரிசையில் 80ஆவது இடம்படித்துள்ள ஈராக், 58ஆவது இடத்திலிருக்கும் தென்கொரிய அணிகள் மோதின. இரு அணிகளும் சமவலிமையுடன் இருந்ததால் ஆட்டத்தின் தொடக்கத்திலிருந்தே விறுவிறுப்பு காணப்பட்டது. இரு அணியின் தற்காப்பும் பலமாக இருக்க, முதல் பாதி கோலின்றி சமநிலையில் முடிந்தது. இரண்டாவது பாதியிலும் இதேநிலை தொடர, 'மேலதிக நேரம்' அளிக்கப்பட்டது. இதிலும் இரு அணி வீரர்களால் கோலடிக்க முடியவில்லை. இதனால் 'சமநிலை உடைப்பு உதை' முறை பயன்படுத்தப்பட்டது. இதில் ஈராக் கோல் காப்பாளர் ஹசன் ராட்பரியன் அபாரமாக செயற்பட்டு, தென்கொரிய வீரர்களின் வாய்ப்புகளை வெகுவாக குறைத்தார். தென்கொரிய வீரர்களால் 3 கோல்கள் மட்டுமே அடிக்க முடிந்தது. துடிப்புடன் செயற்பட்ட ஈராக் வீரர்கள் தங்களுக்குக் கிடைத்த வாய்ப்புகளை சிறப்பாக பயன்படுத்தி கொண்டார்கள்.

ஹவர் முல்லா முகமது, குவாசே முனிர், ஹைதர் அப்துல் அமிர், அகமது மஜித் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். இறுதியில் ஈராக் 4-3 என்ற கோல் கணக்கில் வென்று, முதன் முறையாக இறுதிக்குள் நுழைந்தது.



கோலாம்பூரில் நடக்கும் ஆசிய கிண்ண உதைபந்துத் தொடரின் அரையிறுதியில் ஈராக், தென் கொரியாவை வீழ்த்தியது. இந்த மகிழ்ச்சியைக் கொண்டாடும் ஈராக் ரசிகை.

## ஓய்வுபெற்றார் இத்தாலியின் பிரான்ஸ்சிஸ்கோ டோட்டி

**பிரான்சிஸ்கோ டோட்டி ஓய்வு**

பிரபல உதைபந்தாட்ட வீரர் பிரான்சிஸ்கோ டோட்டி சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார்.

இத்தாலி உதைபந்தாட்ட வீரர் பிரான்சிஸ்கோ டோட்டி. கடந்த 1998 இல் அறிமுகமான இவர், 2006 இல் உலக கிண்ணத்தை வென்ற அணியிலும் இடம் பிடித்திருந்தார். இதன் பின்னர் இவர் தேசிய அணியிலிருந்து தற்காலிகமாக விலகியிருந்தார். கடந்த செப்ரெம்பரில் முக்கிய போட்டிகளில் மட்டும் விளையாட விருப்பம் தெரிவித்திருந்தார். தற்போது திடீரென சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

முழு உடற்தகுதியுடன் இருப்பது கடினமாக உள்ளது. இதனால் தேசிய அணியிலிருந்து ஓய்வு

**அனைத்துலக அரங்குகளில்**

பெற முடிவு செய்துள்ளேன். ஒரே ஆண்டில் பல போட்டிகளில் விளையாடுவது மிகவும் கடினம். எனினும் இத்தாலியின் ரோமாவுக்காகத் தொடர்ந்து விளையாடுவேன். அணி வீரர்கள், பயிற்சியாளரிடம் குழப்பம் ஏற்படுத்த விரும்பவில்லை. உடல் நலத்தை கவனிப்பது மிகவும் அவசியம். என் மீது எழுந்த விமர்சனங்களுக்கு பதிலளிக்க தயாராக உள்ளேன். இவ்வாறு டோட்டி தெரிவித்தார்.

**டிலான்**

கடந்த 2006இல் நடந்த உள்ளூர் போட்டிகளில் அதிக கோல்கள் (26) அடித்த வீரர் என்ற பெருமையை டோட்டி பெற்றார். உலக கிண்ணத்தில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாம் சுற்று போட்டி, அரையிறுதி (எதிர்: ஜேர்மனி) ஆகிய போட்டிகளில் இத்தாலி வெற்றி பெற உறுதுணையாக இருந்தார். இது வரை 58 போட்டிகளில் ஆடியுள்ள இவர் 9 கோல்கள் அடித்துள்ளார். ★

---

## ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணம் கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று



ஜொனியன்ஸ் அணித்தலைவர் வி.குமணன்



ஜொலிஸ்ரார் அணித்தலைவர் எஸ்.லக்சுமிகாந்

யாழ்ப்பாணம், ஜூலை29

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நான்காவது முறையாக நடத்தும் வி.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது.

சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா கிரிக்கெட் தேசிய அபிவிருத்தி மையத்தின் வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான இணைப்பாளர் வீ.கே.சண்முகலிங்கம் கலந்து கொள்வார்.

இந்த இறுதிப்போட்டியில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யாழ்.ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதும்.

வெற்றி பெறும் அணிக்கு ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணமும் பணப் பரிசிலும் வழங்கப்படும். இரண்டாம் இடத்தைப் பெறும் அணிக்கு ஜெயா கனகநாயகம் வெற்றிக் கிண்ணமும் பணப் பரிசிலும், ஆட்டத் தொடர் நாயகனுக்கு எஸ்.டி.சிவமித்திரன் வெற்றிக் கிண்ணமும் ஆட்ட நாயகனுக்கு எஸ்.மணிவதனன் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்படும். (50)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## SRI LANKA BOOK DEPOT
## பாடப் புத்தகங்கள் விற்பனையாகின்றன

✱ தரம் 1 முதல் உயர்தரவகுப்பு வரையான மாணவர்களுக்குரிய அனைத்து வகையான (தமிழ், ஆங்கிலம், சிங்களம்) புதிய பாட நூல்கள், செயல் நூல்கள், பயிற்சிப் புத்தகங்கள் மற்றும் அனைத்து வகையான - இந்திய வெளியீடுகள் யாவும் விற்பனையாகின்றன.

(30.07.2007) திங்கட்கிழமை முற்பகல் 9 மணி(முதல் பிற்பகல் 4 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

✱ ஏமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ள முந்துங்கள்.

குறிப்பு : அப்பியாசக் கொப்பிகளான இரட்டைறூல் / பெரிய சதுர றூல் / நான்குறூல் என்பனவும் வந்துள்ளன.

தொடர்புகளுக்கு:
ஸ்ரீலங்கா புத்தகசாலை,
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2573

(சி/53061)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 16 - 02 - 1962

உதிர்வு 29 - 07 - 2006

**திருமதி ஸ்ரீரஞ்சினி கந்தசாமி**

ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும் நீங்காது உங்கள் நினைவு
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

புலவர் வீதி,
நவாலி வடக்கு. (62984)

கணவர், பிள்ளைகள்.

## கண்ணீரில் நெக்குரும் 10 ஆம் மாத நினைவுகளில்



மனம் மகிழ 29 ✱ 11 ✱ 1938

மனம் நெகிழ 07 ✱ 10 ✱ 2006

**அமரர் லயன் கதிர்காமத்தம்பி நாகராசா J.P.**

(இளைப்பாறிய அதி[illegible]ர், தெல்லி / மகாஜனாக் கல்லூரி, யாழ். மாவட்ட இணைப்பாளர், இந்து கலாசார [illegible]திணைக்களம், சமூக சேவைகள் அமைச்சு)

அகிலமதில் நாமுயர வழிகள் [illegible] செய்தீரே
மேதினியில் நாம் வாழ வளம் பல சோத[illegible]தீரே [illegible]மே!
எமது நல் வாழ்விற்கு வழிகாட்டிய அன்புத் தெய[illegible]
உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

8 ஆம் கட்டை,
மல்லாகம். (62945)

உம் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 27 ✱ 03 ✱ 1947

மறைவு 09 ✱ 08 ✱ 2006

**அமரர் நடராசா சண்முகராசா**

திதி : பூரணை (29.07.2007)

பண்பின் சிகரமாய் வாழ்ந்து
பரிவிற்கு உதாரணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
யாவருக்கும் இனியவராய் வாழ்ந்து
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு
ஒன்றானாலும் ஆறாது எம்துயர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
கோப்பாய் வடக்கு,
கோப்பாய். (62992)

காயத்திரி (மனைவி),
அக்காமார், உறவினர்கள்.

## யாழ்.பல்கலைக்கழகத்தின் உடற்கல்வி டிப்ளோமா தகுதிகாண் பரீட்சை

யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி டிப்ளோமாக் கற்கைநெறி அனுமதிக்கான உடற் தகுதிகாண் பரீட்சை நாளை திங்கட்கிழமையும் மறுதினமும் நடைபெறவுள்ளது.

நேர்முகப்பரீட்சைகள் அடுத்த மாதம் 2, 3ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளன.

கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களையும் தகுதிகாண் பரீட்சைக்கும் நேர் முகப் பரீட்சைக்கும் தோற்றுமாறு உதவிப் பதிவாளர் (அனுமதிகள் கிளை) கேட்டுள்ளார். (அ-1)

## ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் மாணவருக்கான பயிற்சி வகுப்புகள்

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட பயிற்சி வகுப்புகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மட்டுவில், கைதடி, நாவற்குழி, வரணி, கொடிகாமம், சாவகச்சேரி, மீசாலை ஆகிய இடங்களில் பயிற்சி வகுப்புகளை இப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளை இணைத்து நடத்தத்திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-207)

## தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

தேசிய பாடசாலைகளில் சேவையாற்றும் அனைத்துத் தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதென அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

இதுவிடயமாகக் கல்வியமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரத்தை ஏற்று அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

வடக்கு-கிழக்கில் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் வெற்றிடங்களை இதன் மூலம் நிவர்த்திக்கலாம் என்று தபால், தொலைத் தொடர்புகள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (1)

## திருமண சேவை

இந்து, கிறிஸ்தவர், டாக்டர், இஞ்சினியர், எக்கவுண்டன், லிகிதர், ஆசிரியர், அரச, தனியார்துறையில் உயர்பதவி வகிப்பவர்கள் சைவபோசனம், உள்நாடு, வெளிநாடு மணமக்கள் தேவைக்கு. கிளைகள்:-
திவ்வியா பேக்கரி அருகில்
ஸ்ரேசன் வீதி, சுன்னாகத்தில்
திங்கள், புதன் நாள்களில் 9 - 2 மணிவரை தொடர்பு கொள்ளலாம். விவரங்களுக்கு
தலைமைச்செயலகம் :- சிவாலயா
சர்வதேச திருமண நிலையம்.
389 C, இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி.
T.P. : 0775834982 (62994)

## வீடு விற்பனைக்கு

பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கில் 4 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு. ரூபா 70,00,000/= (எழுபது இலட்சம்). தொடர்பு:S. சிறி, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு.
T.P.:0777111400. (62999)

## விற்பனைக்கு

நாவற்குழி மகாவித்தியாலயத்துக்கு அருகில் 3 பரப்புக்காணியுடன் வீடும் கடையும் (தளபாடங்களும்) விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
து.ஐயாத்துரை,
நாவற்குழி, கைதடி.
தற்காலிக முகவரி:
20, விநாயகர் வீதி, சுண்டுக்குளி.
(62991)

## உடன் விற்பனைக்கு

192, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்தில் [illegible] சந்திக்கும் பிறவுண் வீதி பெருமாள் கோயில் [illegible] கரணியில் சந்திக்கும் இடையில் 2½ பரப்பு[illegible] 60 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட வீடு உடன் விற்பனைக்குண்டு. விலை ரூபா 81,000,00/- (எண்பத்தொரு இலட்சம்) பார்வையிடும் நேரம்.
மு.ப. 9 - 12 மணிவரை
பி.ப. 3-5 மணிவரை
தொடர்பு: தேவன், 192, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (62839)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக பொறியியலாளர்
பால கிருஷ்ணன் உதயகுமார்
அவர்களின் அன்புத்தாய்
**சுகிர்தரஞ்சிதமலர் பாலகிருஷ்ணன்**
அவர்கள் 26.07.2007 காலை
இறைபதமடைந்ததை அறிந்து நாம்
பெரும் அதிர்ச்சியும் துயரமும்
கொண்டுள்ளோம். அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனு
தாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.
பொறியியற் பீடம் (2002/2003)
மொறட்டுவ பல்கலைக்கழகம். (62976)

## மகாகும்பாபிஷேகம்

சந்திரபுரம், மட்டுவிலில் அமைந்து விளங்கும் பழமை வாய்ந்த செல்லப்பிள்ளையார் ஆலய மகாகும்பாபிஷேக விழா 16-09-2007 அன்று நடத்தத் திருவருள் கைகூடியுள்ளதால் முடிவுறாத திருப்பணிகளுக்கும் - கும்பாபிஷேக விழாவிற்கும் அடியார்களிடம் இருந்து திருப்பணிச் சபை நிதி உதவியை வேண்டிநிற்கிறது. உதவ முன்வருவோர் ஆலயத்தில் நேரடியாக சென்று கையளித்துதவலாம்-

திருப்பணிச்சபையினர்.
(62876)

செல்லப்பிள்ளையார் கோயில்,
மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்.

## ரெய்கி யோக வைத்தியம்
### (இயற்கை வைத்தியம்)

✱ கை, கால், தலைவிறைப்பு ✱ வாதம், மூட்டு வலி, தசைப்பிடிப்பு ✱ மூட்டுக்கள், தேய்மானம் ✱ நீண்டநாள் நித்திரை இல்லாமை ✱ கைகால் நடுக்கம், கழுத்துப் பிடிப்பு, இடுப்பு வலி ✱ சிக்குன் குனியா வீக்கம், வலி, இழுப்பு ✱ மூச்சுத்திணறல் மற்றும் பழைய நோக்கள் உள்ளவர்களும், மருந்துகள் பயனளிக்காதவர்களும் நேரில் தொடர்பு கொள்ளவும்.

'ஆலோசனை இலவசம்'

'யோக மருத்துவம்'
சாரையடி, பருத்தித்துறை.
(62985)



உலகப் புகழ்பெற்ற ஆன்மீக குரு
தவத்திரு
**ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்**
## வாழும் கலைப் பயிற்சி

ஆர்ட் எக்ஸெல் (ART EXCEL-All Round Training in Excellence)
[8 - 16 வயது வரையானவர்க்கு]
பயிற்சி நாள் : 04.08.2007 தொடக்கம் 08.08.2007 வரை
நேரம்: காலை 8.30-11.30 மணி அல்லது பிற்பகல் 1.30-3.30 மணிவரை

அடிப்படைப் பயிற்சி
(18 வயதிற்கு மேற்பட்டோருக்கானது)
(பிராணாயாமம், பாஸ்திரிகா, சுதர்சனகிரியா மூச்சுப்பயிற்சி உள்ளடக்கியது]
இலவச அறிமுக உரை திங்கள் மாலை 3.30 மணி
பயிற்சி நாள் : 31.07.2007 தொடக்கம் 05.08.2007 வரை
நேரம்: காலை 6.30-8.30 மணி அல்லது பிற்பகல் 3.30-5.30
இடம்: கம்பன் கோட்டம், கோயில் வீதி, நல்லூர்.

குறிப்பு: குருபூர்ணிமாவை முன்னிட்டு வாழும் கலை பயிற்சி எடுத்தவர்களுக்கு இன்று ஞாயிறு பி.ப.3 மணிக்கு 'சுதர்சன கிரியா' நடைபெறும்.

தொ.பே: 0777250879
0779434879
(62975)

மேலும் விவரங்களுக்கு
சர்வதேச வாழும் கலை அறநிறுவனம்,

## அலுவலக உபகரணங்கள் வழங்குவதற்கான
## கேள்வி அறிவித்தல்

மாவட்டச் செயலக, பிரதேச செயலக, தேவைகளுக்காக பின்வரும் பொருள்களைப் பெறுவதற்குப் பொருத்தமான வழங்குநர்களிடம் இருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. பொருள்களை கொழும்பில் வழங்குவதற்கான கூறுவிலைகளும் அவற்றை யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வழங்குவதற்கான கூறுவிலைகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படவேண்டும். மேலும் கணனிகள், கணனிப்பதிப்பு இயந்திரங்கள் வழங்கப்பட்ட பின்னர் அதற்கான வழங்கலுக்குப் பிந்திய திருத்த சேவைகள் யாழ்ப்பாணத்தில் செய்து கொடுக்கப்படவேண்டும்.

Computer, Printer, UPS, Stabilizer, Refrigerator ஆகியவற்றின் உற்பத்தி சம்பந்தமான (Made, Capacity, Specification, Branded or assemble, warranty) பற்றிய முழுமையான விவரங்கள் குறிப்பிடப்படவேண்டும்.

பொருள்கள்
1. Computers
2. Laser Printer
3. Dot Metric Printer (Large)
4. Dot Metric Printer (Small)
5. U.P.S.
6. Stabilizers
7. Refrigerator

கேள்விகள் யாவும் 20.08.2007 பிற்பகல் 2.30 மணிக்கு மூடப்பட்டு பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். கேள்விகள் யாவும் தலைவர், கேள்விச்சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்று விலாசமிட்டு பதிவுத்தபால் மூலமாவோ, நேரடியாக [illegible] இப்பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் இடலாம். கடித உறையில் [illegible] இடதுபக்கமேல் மூலையில் 'அலுவலக உபகரணங்கள் வழங்குவதற்கான [illegible]கேள்விகள்' என்று குறிப்பிடப்படவேண்டும்.

கே.கணேஷ்,
தலைவர், கேள்விச்சபை,
அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளரும்,
யாழ்.மாவட்டம்.
(சி/53059)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மீண்டும் அதே அபத்தம்!

வரலாற்றுச் சக்கரம் மீளச் சுழலத் தொடங்கியிருப்பதாகத் தோன்றுகின்றது. கிழக்கை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து முற்றாக விடுவித்து விட்டதாக அறிவித்திருக்கும் அரசு அங்கு மாகாண சபைத் தேர்தலையும் தமிழ்ப் பிரதேசங்களில் நடத்தப்படாமல் எஞ்சியிருக்கும் ஒன்பது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களையும் நடத்தத் தயாராகி வருவதாகவும் அறிவித்திருக்கின்றது.

1987இல் செய்யப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அடுத்து, அதற்கு அமையக் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறைமையின் கீழ் 1988 இல் முதலாவது மாகாண சபைத் தேர்தல்கள் நாடு முழுவதிலும் நடத்தப்பட்டன. இலங்கை - இந்திய ஒப்பந்தம் வலியுறுத்திய ஏற்பாடுகளுக்கு அமைய தமிழர் தாயகமான வடக்கும் கிழக்கும் முதல் தடவையாகவும், சரித்திரத்தில் ஒரே தடவையாகவும் இணைந்த நிலையில் மாகாண சபைத் தேர்தலைச் சந்தித்தன. அதன்பின்னர், தென்னிலங்கை பல மாகாண சபைத் தேர்தல்களைச் சந்தித்துவிட்டது. ஆனால், வடக்கு, கிழக்கில் மீண்டும் மாகாண சபைத் தேர்தல் சாத்தியப்படவேயில்லை.

இப்போது, சுமார் இருபது ஆண்டுகள் கழித்து, தமிழர் தாயகத்தை சட்டரீதியாகவும், நீதித்துறைத் தீர்ப்பு வாயிலாகவும் வடக்கு - கிழக்கு என இரண்டு மாகாணங்களாகத் துண்டித்து, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சத்தையே நிராகரித்துக் குப்பைக் கூடையில் தூக்கி எறிந்துவிட்டு, கிழக்கு மாகாண சபைக்குத் தனியான தேர்தலை நடத்தத் தயாராகி வருகின்றது கொழும்பு அரசு.

பல்லாயிரக் கணக்கில் இந்தியப் படைகள் ஈழத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமித்து நிற்க, முதலாவது மாகாண சபைத் தேர்தல் என்ற அபத்த நாடகம் இங்கு அரங்கேறியது. அப்போது நடந்தது என்னவென்பதை கொழும்பு ஒரு தடவை சீர்தூக்கிக் கவனத்தில் கொள்ளுமாயின் மீண்டும் ஒருமுறை இந்த அபத்தமான காரியத்தில் இறங்கும் பரீட்சையில் அது குதிக்கமாட்டாது என்பது திண்ணம்.

அந்த மாகாண சபைத் தேர்தல் நடந்தபோது முழு ஆயுத வளத்தோடும், இராணுவப் பலத்தோடும் பல்லாயிரம் இந்தியப் படைகள் வடக்கு - கிழக்கு எங்கும் உறுதியாக நிலைகொண்டிருந்தன.' விடுதலைப் புலிகள் வன்னிக் காடுகளில் மறைந்து - ஒளிந்து - நிலைகொண்டிருந்தனர். வடக்கு - கிழக்கில் எந்தப் பிரதேசமும் அவர்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் எனத் தனியாக இருக்கவில்லை.

ஆனால், வலுவான இந்தியப் படைகளின் பின்புலத்தில் தூக்கி நிறுத்தப்பட்ட வரதராஜப் பெருமாளின் அந்த மாகாண சபையால் உருப்படியாக ஏதும் செய்ய முடிந்ததா? நிர்வாகத்தைத் தன்னும் நடத்த இயலுமாக இருந்ததா? இந்தியப் படைகளின் சீருடைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு இருந்துவிட்டு, ஒரு தலைப்பட்சமாக 'சுதந்திர ஈழம்' என்ற பிரகடனத்தைக் கேலிக்கூத்தாக விடுத்துவிட்டு, நாட்டை விட்டு ஓடித் தப்பவே அதனால் முடிந்தது.

புலிகளிடம் தனியாக ஒரு நிர்வாகக் கட்டமைப்புப் பிரதேசம் இல்லாதபோது - புலிகளை அடக்கி, ஒடுக்கி ஒரு தலைமறைவு கெரில்லா இயக்கமாக அலையவிட்ட சமயத்தில் கூட - மிகப் பலமான இந்தியப் படைகளின் ஆக்கிரமிப்பின் கீழ் உருவாக்கப்பட்ட பாதுகாப்புக் கவசத்தை வைத்துக் கொண்டிருந்தும் கூட - அந்த மாகாண சபை நிர்வாகம் புஸ்வாணம் ஆகிப்போனது. அந்தப் பட்டறிவை மறந்து மீண்டும் அதே தடத்தைத் தனது அரசியல் காய் நகர்த்தல்களுக்கான தந்திரமாகக் கையில் எடுக்கிறது மஹிந்த அரசு.

அப்போது - 1988இல் - முதலாவது மாகாண சபைத் தேர்தல் நடக்க முன்னர் - தமிழர் தாயகம் முழுவதுமே இந்திய இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ், இராணுவ ஆட்சி முறைக்குள் அடக்கப்பட்டிருந்தமை மறக்கப்படக் கூடியது அல்ல.

அத்தகைய - அதே - நிலைமையே இப்போது, கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு கொழும்பு அரசு தயாராகும் சமயத்திலும் கிழக்கிலும் நிலவுகின்றது.

*'கிழக்கில் மக்கள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தகவல்கள், கருத்துக்களை மக்கள் சுதந்திரமாக வெளியிடமுடியாத வகையில் இராணுவ இறுக்கம் அவர்கள் மீது நெறிக்கப்பட்டிருக்கின்றது. அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் மீது கிழக்கில் கட்டளைத் தளபதி பராக்கிரம பன்னிப்பிட்டிய இராணுவக் கெடுபிடிக் கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றார். வாகரை மீள்குடியேற்ற நடவடிக்கை முற்றும் முழுதாக இராணுவத்தினாலேயே கையாளப்படுகின்றது. கொக்கட்டிச்சோலை, போரதீவு போன்ற பகுதிகளில் முழு நிர்வாகமுமே இராணுவத்தின் கைகளில்தான். ஆக, கிழக்கில் சிவில் நிர்வாகச் செயற்பாடுகள் இராணுவ மயப்படுத்தப்படுகின்றன.'* - என்று சுயாதீன வட்டாரங்கள் ஏற்கனவே அம்பலப்படுத்தி இருப்பது கவனிக்கத்தக்கது.

ஆக, இந்திய அமைதிப்படை தமிழர் தாயகத்தின் மீது திணித்த மாகாண நிர்வாகம் போன்ற அபத்தம் ஒன்றை சுமார் இருபது ஆண்டுகள் கழித்து கிழக்கு மக்கள் மீது அதே பின்புலத்தோடு சுமத்த மஹிந்தரின் அரசு தயாராகின்றது.

கிழக்கிலிருந்து புலிகளை விரட்டி, கிழக்கை முற்றாக விடுவித்து விட்டதாக உறுதிப்பாடு கொண்டுள்ள அரசு, அதன் காரணமாகத் தனது மாகாண நிர்வாகம் என்ற நாடகம் அங்கு செம்மையாக அரங்கேறும் - அவியும் - என்று நம்புகின்றது போலும்.

சீர்குலைந்து, வன்னிக் காட்டுக்குள் தடுமாறிக் கொண்டிருந்த சமயமே அப்போதைய வடக்கு, கிழக்கு மாகாண நிர்வாகத்தைத் தடுமாறித் தள்ளாட வைத்த புலிகளுக்கு, உத்தேச கிழக்கு மாகாண சபையும் அதன் நிர்வாகமும் எப்படியிருக்கும் என்பதை எவரும் ஊகிக்க முடியும்.

''கிழக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தும் அரசியல் தந்திரோபாயக் காய் நகர்த்தலில் மஹிந்த அரசு இறங்கினால், அதனால் விபரீத விளைவுகள் ஏற்படும்'' - என்று புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் குறிப்பிட்டமையை - எச்சரித்தமையை - இந்தப் பின்னணியில்தான் நோக்கவேண்டும்.

# கொக்குவில் கிழக்கில் ஊரடங்கு வேளையில் துப்பாக்கி முனையில் நகைகள் கொள்ளை

யாழ்ப்பாணம்,ஜூலை 29

கொக்குவில் கிழக்கு, சம்பியன் வீதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் ஊரடங்கு நேரம் புகுந்த கொள்ளையர்கள், துப்பாக்கி முனையில் மிரட்டி ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் உட்பட பெறுமதியான பொருள்களைக் கொள்ளை அடித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள ஓய்வு பெற்ற அதிபர் ஒருவரின் வீட்டிலேயே இக்கொள்ளை இடம்பெற்றுள்ளது.

இரவு 9 மணியளவில் அதிக வெளிச்சம் கொண்ட ரோச் லைட்டுடன் குறிப்பிட்ட வீட்டிற்குச் சென்றவர்கள் முகத்தை துணியால் மறைத்துக் கட்டியிருந்தனர். கொள்ளையர்கள் கதவைத் திறக்கும்படி பலத்த சத்தமிட்டுள்ளார்கள்.

வீட்டில் உள்ளவர்கள் திருடர்கள் எனக் கூக்குரலிட்ட போதிலும் அயலவர்கள் உதவிக்குச் செல்லவில்லை.

வெளியே இருந்த உலக்கையைக் கொண்டு கதவை உடைத்து உள்ளே சென்ற கொள்ளையர்கள் கணவன், மனைவி இருவரையும் துப்பாக்கியைக் காட்டிப் பயமுறுத்தி அவர்களை உட்காரச் செய்திருக்கிறார்கள்.

அதன் பின்னர் வீட்டின் அனைத் இடங்களையும் சோதனையிட்டு தங்க நகைகளையும் கையடக்கத் தொலைபேசியையும் எடுத்துக்கொண்டு மகன் கொழும்பில் இருந்து எப்போது வருவார் என்று சிங்களத்தில் கேட்டுவிட்டுச் சென்றுள்ளார்கள்.

வீட்டில் பொருள்களைத் தேடிய திருடர்கள், அங்கிருந்த முட்டை, வாழைப்பழம் என்பவற்றையும் சாப்பிட்டுவிட்டுச் சென்றுள்ளனர்.

அயலவர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் அப்பகுதிக்கு இராணுவத்தினர் சமுகம் கொடுத்தபோதிலும் உரிய இடத்துக்கு இராணுவத்தினர் வருவதற்கு முன்னரே திருடர்கள் தப்பிச் சென்றுள்ளார்கள்.

தற்போது இராணுவத்தினர் அப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் தம்முடன் தொடர்புகொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கங்களை பொதுமக்கள் அறியக் கூடியதாக ஒட்டியுள்ளார்கள். (அ-1-68)

# இலங்கை - ஆஸி. இடையே விமானச் சேவை உடன்பாடு

கொழும்பு,ஜூலை 29

இலங்கைக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையில் விமானச் சேவை ஆரம்பிப்பது தொடர்பான உடன்பாட்டில் கைச்சாத்திட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கப்பல் மற்றும் விமானத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ இது தொடர்பாக சமர்ப்பித்த பத்திரத்தை அமைச்சரவை ஏற்றுக்கொண்டது.

கடந்த மே மாதம் இரு நாடுகளின் பிரதிநிதிகளும் கன்பெராவில் சந்தித்து கலந்துரையாடி, இது தொடர்பான இணக்கம் காணப்பட்டது என அமைச்சர் தமது அமைச்சரவைக்கான அறிக்கையில் தெரிவித்திருந்தார். (அ-1)

# உயர்தரப் பரீட்சையை குடாநாட்டில் சுமுகமாக நடத்துவது குறித்து ஆராயக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை 29

எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்மாகவிருக்கும் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சை சுமுகமாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று இன்று பலாலியில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் செயற்படும் கல்வி வலயங்களின் பணிப்பாளர்கள் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

பரீட்சைக்கு மாணவர்கள் கால தாமதம் இன்றி செல்லக்கூடிய வழிமுறைகள் குறித்தும் பரீட்சை வினாத்தாள்கள் உரிய நேரத்துக்கு பரீட்சை நிலையங்களுக்கு கொண்டு செல்ல எடுக்கப்படவேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

# மினிபஸ் பயணங்கள்: திருந்தவேண்டியது யார்? வாகனச் சொந்தக்காரர் மட்டுமன்றி மக்களும்தான்!

''அண்ணை அதில ஆட்கள் நிற்கிற இடத்தில நிப்பாட்டுங்கோ. அவர்களையும் ஏற்றிக் கொண்டு போவம். அதில இருக்கிற நீங்கள் கொஞ்சம் பின்னுக்குப் போங்கோ.'' இது மினிபஸ் நடத்துநரின் குரல்.

''நாங்கள் என்ன ஆடு மாடா? பஸ்ஸிற்குள் கால்வைக்க இடமில்லாமல் நெரிபட்டுக்கொண்டு நிற்கிறம். இனியும் ஆட்களை ஏத்த வேணுமெண்டு இவங்களுக்கு ஆசை. கிழங்கு அடுக்கினது மாதிரி மூச்சு எடுக்க முடியாமல் இதுக்க நிண்டு அவிஞ்சு சாகிறம். மேலும் ஆட்களை ஏத்தி எங்க ளைக் கொல்லப்பாக்கிறாங்கள்'' - இவை மினிபஸ்ஸினுள் அவஸ்தைப்படும் பயணிகளின் குரல்கள்.

''ஆரு இப்படிக் கதைக்கிறது! நீங்கள் மட்டும்தான் போகவேணுமா, மற்றவையள் போகவேணாமா - கதைய விட்டுட்டுப் பின்னுக்கப் போங்கோ நிறைய இடமிருக்கு''

- இது நடத்துநரின் குரல்.

''ஆக்களை ஏற்றத்தான் வேணும். ஆனால் பஸ்ஸுக்குள் நாங்களே நிக்கிறத்துக்கு கஷ்டப்படுறம். அதுக்குள்ள இன்னும் ஆக்களை ஏத்தினா நாங்கள் மூச்சடங்கிச் சாகிறதா?

''சனங்கள் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. அவங்களுக்குத் தேவை காசு. மினிபஸ்ஸில ஏறினா இதுதான் உபத்திரவம்''

- இது பயணிகளின் குரல்.

''ணேய் இந்தா உன்ர காசு. இறங்கண கீழ பஸ்ஸென்டால் சனத்தை ஏத்துறதுதான் எங்கட வேலை. விரும்பினால் சத்தம் போடாமல் இரு. கஷ்டமெண்டால் கீழ இறங்கி தனிவான் பிடிச்சுப் போ''

- இது நடத்துநரின் குரல்

இவ்வாறான சம்பாசணைகளை தினமும் நாங்கள் மினிபஸ்களில் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். இதில் யார் கதைப்பது சரி. யார் கதைப்பது பிழை. நியாயம் சொல்ல முடியாத இக்கட்டான நிலை நமக்கு.

இந்த உரையாடலைத் தொடர்ந்து கேட்டுப் புளித்துப் போய் விட்டது

### போட்ட முதலை எடுப்பது எப்போது...?

பல லட்சம் ரூபா முதலிட்டு வாகனத்தைக் கொள்வனவு செய்து வழித்தடங்கல் (றூட்) அனுமதி பெற்று போக்குவரத்தில் வாகனத்தை ஈடுபடுத்தும் வாகனச் சொந்தக்காரர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயணிகளை ஏற்றும் பணியில் ஈடுபட்டால் போட்ட முதலை எடுப்பது எப்போது? அத்துடன் வாகனத்திற்கான எரிபொருள் செலவு வாகனத்தில் பணிபுரிவோரின் (சாரதி, நடத்துநர்) சம்பளம் ஆகியவற்றுக்கு என்ன செய்வது பயணிகள் தமது பயணத்தை சொகுசாகச் செல்ல ஆசைப்படுகிறார்கள். ஆனால் வாகனம் நாள் முழுக்க ஓடினாலும் லாபம் கிடைக்குமா என




வாகனச் சொந்தக்காரர்கள் நினைக்கிறார்கள். வீதியில் பயணிக்கும்போது திடீரென பழுது ஏற்பட்டால் ஏற்படும் செலவுகள் ஆயிரக்கணக்கில் முடியும் இதை யார் ஈடுசெய்வது? இந்த நிலையில் பார்க்கும்போது நடத்துநர் நடந்துகொள்ளும் விதம் சரியெனத் தோன்றலாம்.

இனி பயணிகள் பக்கம் நோக்குவோம்.

### பஸ்ஸில் ஏறியதும் எங்களுக்கு உண்டாகும் சுயநலம்

பயணம் என்பது அவசரம்தான். வீட்டிலிருந்து புறப்படும் போது தான் செல்லும் இடத்திற்கு நேரத்துடன் போய்விட்டுத் திரும்ப வேண்டுமென கடவுளை நினைத்து விட்டே புறப்படுகிறார்கள். வீதிக்கு வந்ததும் முதலில் வரும் வாகனத்தில் ஏறிச் செல்ல வேண்டுமென்ற ஆவலில் காத்திருக்கிறோம். முதலில் வரும் வாகனத்தில் சனநெரிசலாக இருந்தாலும் தானும் பஸ்ஸினுள் ஏறிவிட வேண்டுமென்று முண்டியடித்து ஏறிவிடுகிறோம். பஸ்ஸினுள் ஏறியதும் எம்மையறியாமல் சுயநலம் தோன்றுகிறது. நான் மட்டும் வசதியாக போக வேண்டும் மற்றவர்கள் வீதியில் நிற்க நேர்ந்தாலும் கவலையில்லை என்பது போல் எண்ணத் தோன்றுகிறது. எல்லோரும் அவசர தேவைக்காகத்தான் காத்திருக்கிறோம் என்பதை மறந்து விடுகிறோம்..

[illegible] வாசலில் மினிபஸ்ஸை நிறுத்தி ஏறுவதும், வீட்டு வாசலில் நிறுத்துமாறு கேட்டு இறங்கிச் செல்வதும் ஒருவர் வீட்டு வாசலில் நின்று மறிக்க மற்றவர் வரும் வரை காத்திருந்து ஏற்றிச் செல்லும் மினிபஸ்ஸின் சேவைகளை பிரயாணிகள் மறந்து விடுகிறார்கள்.

அதிக எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிவரும் வாகனங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு நீதிவான் பணிப்பு.

அதிக எண்ணிக்கையான பயணிகளை ஏற்றி பயணிகளின் உயிரைப் பணயம் வைக்க வேண்டாம் - மினிபஸ் சாரதிக்கு நீதிவான் எச்சரிக்கை.

அதிக எண்ணிக்கையான பயணிகளை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதிக்கு ...... ஆயிரம் ரூபா அபராதம்.

இவ்வாறான செய்திகளை நாங்கள் அடிக்கடி செய்திப் பத்திரிகைகளில் பார்க்கின்றோம். இச்செய்திகளை உற்று நோக்குவோமாயின் இந்தக் குற்றத்துக்கு உடந்தையாக இருந்த பங்கு பயணிகளுக்கும் உண்டு எனலாம்.

நாங்கள் பயணிகள் எம்மைப் பாதுகாக்க வேண்டுமென சிந்தித்து பிரயாணம் செய்ய முன்வருவதால் பல பிரச்சினைகளை, கஷ்டங்களைத் தவிர்க்கலாம்.

நீதிமன்றங்கள் எவ்வாறான சட்டங்களைப் போட்டாலும், தண்டங்கள் விதித்தாலும் பொலிஸார் எத்தனை வழக்குகளைப் பதிவு செய்தாலும் நம்மை நாம் திருத்தாவிட்டால் சட்டங்களும் வழக்குகளும் பயனின்றிப் போய்விடும்.

மாயவன்
கொடிகாமம்

வீதிக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கையை ஈடுசெய்யும் விதத்தில் வாகனசேவைகள்நடத்தப்படுவதில்லை என்பது அனைவருக்கும் தெரியும். இருப்பினும் குறிப்பிட்ட அளவுக்கு மேல் பயணிகளை ஏற்றிவரும் வாகனங்களில் ஏறுவதில்லை என நாங்கள் முடிவு செய்தோமானால் பல கேள்விகளுக்கு நல்ல முடிவுகள் கிடைக்க வழிபிறக்கும்.

மினி பஸ் சொந்தக்காரர்களும் தங்கள் நலன்களையும் வருமானத்தையும் மட்டுமே முதன்மைப்படுத்தி தொழில் நடத்துவது நியாயமற்றது; ஏற்புடையதல்ல.

மொத்தத்தில் இரு தரப்புகளும் அடுத்த பக்கத்தின் நிலையில் தம்மை வைத்துச் சீர்தூக்கிச் செயற்பட்டால் குற்றஞ்சுமத்துதல்களும் குறைபாடுகளும் குறையுமென நம்பலாம். *

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 7 | திங்கட்கிழமை 23.07.2007 |
| திதி : நவமி | பின்னிரவு 03.04 |
| நட்சத்திரம் : சுவாதி | மாலை : 06.20 |
| [illegible] | : 12.02 - 01.32 |
| [illegible] | : 07.32 - 09.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையின் உச்சியில் புத்தர் சிலை வைப்பதற்கு ஜே.வி.பி. முயற்சி!

## மூதூர் பகுதியில் இனக்கலவர பீதி!!

கொழும்பு, ஜூலை 29

திருமலையில் நல்லுறவுடன் வாழும் சிங்கள - முஸ்லிம் மக்களிடையே முறுகலை ஏற்படுத்த ஜே.வி.பி. அரசியல்வாதிகள் முயன்று வருகின்றனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மூதூர் - 3 ஆம் கட்டை, கல்லுமலைப் பகுதியில் இனக்கலவரமொன்றை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கிவிடப்பட்டிருப்பதாக - தூபமிடப்பட்டிருப்பதாக - தகவல் வெளியிட்டிருக்கும் அப்பகுதி முஸ்லிம் மக்கள், அது தொடர்பில் பீதியடைந்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜே.வி. பியின் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த ஜயசேகர தலைமையிலான பிக்குமார் அடங்கிய குழுவொன்று குறித்த கல்லுமலைப் பகுதிக்கு 'திடீர்' விஜயமொன்றைமேற்கொண்டு மலையின் உச்சியில் புத்தர் சிலை ஒன்றை நிர்மாணிக்கும் முயற்சியில் தீவிரம் காட்டி வருவதாக அறியமுடிந்தது.

அத்துடன் இந்த மலையில் கல்லுடைக்கும் தொழிலைச் செய்தவர்கள் இனிமேல் அதனைக் கைவிட வேண்டும் என்றும் ஜயந்த தலைமையிலான குழுவினர் சம்பந்தப்பட்ட அரச உயரதிகாரிகளிடம் கேட்டுள்ளனர் என்றும் தெரிகின்றது. இதனால் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவிகள் தமது ஜீவனோபாயத் தொழிலை இழந்துள்ளனர்.

இதுவே சிங்கள - முஸ்லிம் மக்களிடையே தற்சமயம் முறுகலை ஏற்படுத்தியிருக்கின்றது. முஸ்லிம்கள் செறிந்து வாழும் இந்த 3 ஆம் கட்டைப் பகுதியில் இனவாதிகளின் இத்தகைய செயற்பாடு பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என முஸ்லிம் மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். அதுவே இனக்கலவரமாக 'விஸ்வரூபம்' எடுக்கலாம் என்றும் அவர்கள் தரப்பில் பீதி நிலவுகிறது.

இதேபோன்ற ஓர் மதக்கலவரமொன்று கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்னரும் இதே கல்லுமலையில் இடம்பெற்றதும் இங்கு குறிப்பிடத்தக்க்து.

குறித்த மலையின் உச்சியில் கிறிஸ்தவர்கள் சிலுவையைக் கொண்டு வந்து வைத்தனர் என்றும்-

அதைத் தொடர்ந்து அப்பகுதியில் தொடங்கிய 'சிலுவைப் போர்' என்ற கலவரத்தில் 10 அப்பாவிகள் பலியாகினர் என்றும் -

அச்சத்தில் உறைந்து போயிருக்கும் முஸ்லிம் மக்கள் முன்னர் நடந்தவற்றை இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுகூர்ந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(அ-சி)

## புலோலி ஆலயத்தில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு,ஜூலை29

வடமராட்சியில், புலோலியில் உள்ள ஆலயம் ஒன்றில் விடுதலைப் புலிகள் மறைத்து வைத்திருந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையம் நேற்றுத் தெரிவித்தது.

பொதுமகன் ஒருவர் வாழங்கிய தகவலின் பேரில் தேடுதல் நடத்திய படையினர் தற்கொலைத் தாக்குதல் அங்கிகள் - 2, 16கிலோ கிளைமோர் - 1, குண்டுகள் - 5, டெற்றனேற்றர்கள் - 4 ஆகியவற்றை மீட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## உயர்தர மாணவர்களுக்குக் கருத்தரங்கு

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி உயர்தர மாணவர் மன்றத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் இந்து நாகரிக பாடத்துக்கு தோற்றும் மாணவர்களுக்கான கருத்தரங்கு நாளை திங்கட் கிழமை காலை 9 மணி முதல் ஒரு மணிவரை கல்லூரியில் இடம்பெறவுள்ளது. கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ள இக்கருத்தரங்கில் இந்து நாகரிகப் பாடத்துறைசார் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு விரிவுரை நிகழ்த்துவர்.

## மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொது மக்களை நேரில் சந்திக்க உள் ளார், அத்துடன் பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள், தொண்டர் ஆசிரியர்கள், அரச நிர்வாகிகள், வன்னியிலிருந்து இடம் பெயர்ந்துள்ள ஆசிரியர்கள், அரசதுறைப் பணியாளர்கள் உட்பட பல்வேறு துறை சார்ந்தவர்களையும் அமைச்சர் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளார்.

பாதுகாப்புத் தரப்பினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான உறவுகளை மேலும் உறுதிப்படுத்தி பொது மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையை வழங்குவதும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் விஜயத்தின் இன்னுமொரு நோக்கமாகும்.

அத்துடன் யாழ். குடாநாட்டில் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்ற அத்தியாவசிய மற்றும் பாவனைப் பொருள்களின் விலைகளைக் கட்டுப்படுத்தி மக்கள் மீதான சுமையை குறைப்பதற்கும் அமைச்சர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது. (அ-1)

## திருமலை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஏழு மாதங்களுக்கு முன்னர் கைச்சாத்திட்டன.

இலங்கை வரும் இந்தியக் குழுவில் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் விஞ்ஞானிகள் இடம்பெறுகின்றனர்.

இலங்கை அரசாங்கம் பிரேரித்துள்ள மூன்று இடங்களை அக்குழு பார்வையிட்டு தகுதியான இடத்தை தெரிவுசெய்யும் என்று மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (1)

## கிழக்கில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு இலவச உலர் உணவு வழங்கல், சுயதொழில் ஆரம்பிக்க உதவுதல் போன்றவையும் 'கிழக்கு எழுச்சி' புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## லண்டனில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொண்டு வருகின்றனர்.

அவர்களில் சிலரின் நிலை மோசமாக இருப்பதாக பிரிட்டன் தமிழ் சட்டத்தரணிகள் சங்கம் அரசின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளது. இவ்விடயம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளது. (அ-1)

## 2 வாரங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து 13 ஆயிரம் பேர் தமிழகத்தில் தங்கியுள்ள நிலையில் கணக்கெடுப்பு நடத்துவது சரியான தகவல்களைத் தராது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.அரியநேத்திரன் தெரிவித்தார். (அ-1)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு விவரித்துள்ளது.

வவுனியாவில் இராணுவம் மற்றும் பொலிஸார் மீது அரசியல் கட்சிகள் நம்பிக்கை இழந்துள்ளன. தங்கள் பாதுகாப்புக் காக ஆயுதங்களை தமது பாதுகாவலர் களுக்கு அரசியல் கட்சிகள்வழங்கியுள்ளன என்றும் கண்காணிப்புக்குழுதனது அறிக்கையில் குறிப்பிட்டுள் ளது.

## தம்மைத் தாக்கிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் அந்தப் படகுகளை விரட்டிச் சென்றனர் -

தப்பிச் செல்ல முயன்ற இரண்டு படகுகளில் இருந்தும் கடற்படையினரின் படகுகளை நோக்கி ஆர்.பி.ஜி. தாக்குதல் நடத்தப்பட்டது. கடற்படையினரும் பதில் தாக்குதலை நடத்தினர் -

இத்தாக்குதலில் இரு படகுகளும் அழிக்கப்பட்டன. ஒரு படகில் இருந்த நால்வரும் அடுத்த படகில் இருந்த இருவரும் கொல்லப்பட்டனர் - என்று கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க தெரிவித்தார். (அ-1)


பிரதிக்கு முந்துங்கள்
வெற்றிவழி A/L தமிழ்
எதிர்பார்ப்பு விடைகள்
பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா
மிதுனா மல்ரி சென்ரர்
(இந்து மகளிர் கல்லூரி முன்)
By: S.S.Ananthan
நாக.தமிழிந்திரன்

PC PARK (PVT) LTD வழங்கும்
நம்பமுடியாத சலுகை!



Only 58,000/-
3GHz / 2M Intel P4 Processor
Intel Core 2 Duo support MotherBoard
512 DDR II Kingston Ram
256 VGA on
80 GB Maxtor Hi-Speed Sata Hard Disk
P4 ATX 450W Casing-Black
Keyboard PS2
Optical Mouse
Samsung DVD Combo Drive
15' LCD Monitor
Warranty : 3 Years

Only 39,250/-
Intel D 2.66 GHz LGA Processor
Intel 865 Chipset MotherBoard
256 DDR1 Ram
40 GB Maxtor Hi-Speed Hard Disk
ATX 450W Casing
CD Rom Drive
15' Viewsonic Monitor
Keyboard PS2
Optical Mouse
Multimedia Speaker
Warranty : 3 Years

Now Available Now...
ViewSonic 15", 17" CRT Monitors, ViewSonic 17" LCD Monitors, Panora 15" LCD Monitors — 3 Year Warranty
Asus Mother Board, Asus VGA Card, Asus Optical Drivers — 3 Year Warranty
Kingston Flash Memory 1GB & 2 GB, Kingston RAMs — 1 Year Warranty
Power Tree UPS 650 W — 1 Year Warranty
DVD Writers, DVD Roms, Combo Drives — 1 Year Warranty
HP Laser Printers, HP Deskjet Printers, Laser Printer Toners — 1 Year Warranty
A4tech Keyboard, Optical Mouse

மறந்துவிடாதீர்! இச் சலுகை ஆகஸ்ட் 10 வரை மட்டுமே!

புத்தம் புதிய கணனிகளை நியாய விலையில் பெற்றுக்கொள்ள
சகல விதமான கணனி உதிரிப்பாகங்களை பெற்றுக் கொள்ள
மிகத் துரிதமான சேவைக்கு
PC PARK (PVT) LTD
இது எங்க ஏரியா! உள்ள வாங்க...

Labtop Computers Amazing Price
HP Laptop Intel ® M430 1.73GHz 75,000/-
HP Compaq Presovio C-563TV 72250 NoteBook Intel Pentium Dual Core 1.73GHz 95,000/-

Kingston hp intel ViewSonic ASUS Logitech
# 633,K.K.S Road, Jaffna.
Telephone: 021 2229581 Fax: 021 2229581 hotline: 0773068998
email: info@pcparkonline.com web: www.pcparkonline.com

MY COMPUTER
தமிழ் கணனி மாத இதழ் சகல இடங்களிலும்.
வெளியீடு: SPEED IT net, 021 4591871.

இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.
MCS Supported By UNDP/JRRP
விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 03-08-2007 முன் நேரில்
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

துரித தபால்கள், பொதிகள் சேவை
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப்பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி - 021 222 7835
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி தொலைபேசி - 021 222 7310

Diploma in Computerized Accounting (With Manual Accounting)
#MYOB #Quick Book Pro #Accpack #Tally
03.08.2007 வரை 60% சலுகை
MCS Supported By UNDP/JRRP மேலதிக விபரங்களுக்கு நேரில் 324, Palaly Road, Jaffna.

கருத்தரங்கு பொருளியல்
N.B.கஜீதரன்
கொழும்பு, கண்டி மாவட்டங்களின் பிரபல பொருளியல் வினாப்பத்திரங்களின் மீட்டல்.
காலம்: 29, 30, 31 ஆம் திகதிகளில்
பி.ப 2.30 – பி.ப 5.30
ஆரம்பம்: 29.07.2007 (இன்று)
நாவலர் ஒளைப்பந்தி, யாழ்ப்பாணம்.

World's Leading Brand @ Local Assembled Rates
IBM Lenovo A55
Intel Pentium D Dual Core 3.0/4M
512MB DDR2 / 80GB HDD
DVD/CD-RW
17" IBM COLOR MONITOR
& Other Facilities
Just 99,000/-
3 Years Warranty
HP Compaq Note Books
In Various Configurations
More Offers Available Just Visit to
UNIT மனோகரா தியேட்டர் சந்தி 347, K.K.S Road, Jaffna Ph:021-4590720


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org